விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 ஆவணி 16 ஜுலகம் 12 இதழ் 200
யாழ்ப்பாணம் புதன்கிழமை 1—9—82



A/L 83
தூயபிரயோக கணிதம்
ஆசிரியர்: RAVIMOHAN
பகல் நேர வகுப்பு
ஆரம்பம்; இன்று 01-09-82
பிரிவு – I App. 8-00 Pure. 9-00
பிரிவு – II Pure. 10-30 App.11-30
மணியம்ஸ் பில்டிங்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[ஸ்ரீதர் சினிமா–நாகவிகாரை இடையில்]
4388



புதிய வகுப்புகள்
G. C. E. A/L
(விஞ்ஞானம், வர்த்தகம், கலை)
G. C. E. O/L
[3 மாத துரித மீட்டல்]
ஆரம்பம்: இன்று 1-9-1982
விடுதி வசதி உண்டு
BOND INSTITUTES
JAFFNA, 4356


★ பரந்தன் இரசாயன ஊழியர் வேலைநிறுத்தம்:

# வேலைக்குத் திரும்புபவர்கள் பழிவாங்கப்பட மாட்டார்கள்!

## அமைச்சர் சிறில் மத்யூ உறுதி அளிக்கின்றார்

(கொழும்பு)

"கடந்த ஒன்பதுமாத காலமாகவே வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வரும் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்கள் எந்நேரத்திலும் வேலைக்குத் திரும்பலாம். எக்காரணம் கொண்டும் அவர்கள் பழிவாங்கப்பட மாட்டார்கள்".

கைத்தொழில் அமைச்சர் திரு. சிறில் மத்யூ நேற்று அளித்த பிரத்தியேகப் பேட்டியொன்றில் இந்த உறுதியை அளித்தார்.

பரந்தன் தொழிற்சாலை தொழில்நுட்ப, எழுதுவினைஞர் மற்றும் தொழிலாளர்கள் சுமார் 375 பேர் இவ்வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

"பழிவாங்கப்பட மாட்டார்கள்" என்ற உறுதிமொழியை அமைச்சர் அளித்துள்ள அதே நேரத்தில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஊழியரின் கோரிக்கை நியாயமற்றவை என்றும் ஆயினும், சிலகோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இவர்களின் தகராறைத் தீர்த்து வைக்கும் பொறுப்பு தொழில் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மத்யூ குறிப்பிட்டார்.

"இப்போது பரந்தன் தொழிற்சாலையில் 200பேர் பணியாற்றுகிறார்கள். தற்போதைய நிலைமையில் குளோரின் பாவனைக்கு எவ்விதப்பிரச்னையின்றி பூர்த்தியாக்கப்பட்டு வருகிறது" என்றும் அமைச்சர் மத்யூ தெரிவித்தார்.

யாழ். நூலக நிதி:

## ஆஸ்திரேலிய இலங்கை தமிழ்ச்சங்கம் உதவி

(யாழ்ப்பாணம்)

நியூ சவுத்வேல்சிலுள்ள, சிட்னி நகரில் தனது தலைமைப் பணியகத்தைக் கொண்டு, அவுஸ்திரேலியாவில் இயங்கி வரும் இலங்கைத் தமிழர் சங்கத்தில் இணைந்த இயக்கமான விக்டோரியாவிலுள்ள இலங்கைத் தமிழ் சங்கம், யாழ். பொதுசன நூல்நிலைய மீள்விப்புக்காக அவுஸ்திரேலியநாணயமாக 3,000 டாலர்களை இது வரை சேர்த்துள்ளது.

கிளேட்டன், மொனாஷ் பல்கலைக்கழகத்தின் ரொபேட் பிளாக்வுட் மண்டபத்தில் யாழ். பொதுசன நூல்நிலைய நிதிக்காக விக்டோரியா இலங்கைத் தமிழ்ச் சங்கம் நடத்திய "நாட்டிய இரவு" நிகழ்ச்சியின் மூலமாகவும், மற்றும் பலரது ஆதரவினாலும் தம்மால் இத்தொகையைச்சேர்க்க முடிந்தது என்று சங்கத்தின் செயலாளர் திரு. இளங்கோ

[8ம் பக்கம் பார்க்க]

## மட்டக்களப்பு அபி. சபை இம்மாதம் 13-ல் கூடும்

(நமது நிருபர் இரா. துரைரத்தினம்)

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திசபை, இம்மாதம் பதின்மூன்றும் திகதி கூடும்.

இத்தகவலை மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. எஸ். சம்பந்தமூர்த்தி நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அபிவிருத்திசபைக் கூட்டம் கடைசியாக கடந்த ஜூன் மாதம் பதின்மூன்றும் திகதி நடைபெற்றது.

இக்கூட்டத்தில்தான், மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவருக்கும் அமைச்சர் தேவநாயகத்துக்குமிடையே பெரும் சர்ச்சை மூண்டதும், அதனைத் தொடர்ந்து கூட்டத்தை ஒத்தி வைத்துவிட்டு தலைவர் வெளியேறியதும் தெரிந்ததே.

[8ம் பக்கம் பார்க்க]

## அணிசேரா மாநாடு புதுடில்லியில் நடக்கும்

புதுடில்லி, ஆக, 31

அணிசேரா நாடுகளின் அடுத்த உச்சிமாநாடு புதுடில்லியில் நடாத்துவதற்கு அதன தலைவர்கள ஒப்புக்கொண்டுள்ளனர்.

ஈராக் தலைநகர் பாக்டாத்தில் செப்டம்டர் 7-ம் திகதி நடாத்துவதற்கு முன்னர் முடிவுசெய்யப்பட்டிருந்தது.

ஏழாவதுஉச்சிமகாநாடுநடத்தப்படும்வரை இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தலைமை வகிப்பார்.

இந்த விபரங்களை கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ வெளியிட்டார்.

பெரியகுளம் இடைத்தேர்தல்:

## மூன்று கட்சிகளும் பலப் பரீட்சை!

சென்னை, ஆக. 31

பெரியகுளம் லோக்சபை இடைத்தேர்தலில் மூன்றுகட்சிகளும் நேரடியாக மோதிமுதல் தடவையாக தமது பலப்பரீட்சையை சோதிக்கமுன்வந்துள்ளன.

பெரிய குளத்திற்கு லோக சபை அங்கத்தவராக தி. மு. க. வைச்சேர்ந்த திரு. கம்பன் நடராசா இருந்தார். இவர் காலமானதை அடுத்தே இத்தேர்தல் நடக்கிறது.

காலமானவரின் சொந்தத் தம்பி திரு. ராமகிருஷ்ணன் அந்த இடத்துக்குப் போட்டியிடுவார் என்று தி.மு.க. அறிவித்துவிட்டது.

தி.முக. போட்டியிடுவதால், இந்திரா காங்கிரஸ் போட்டியிட மாட்டாது என்று ஊகிக்கப்பட்டது. ஆனாலும் இந்திரா காங்கிரஸ் வேட்பாளராக ஜனாப் கே. ஷேக் அப்துல்காதர் போட்டியிடுவார் என்று தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. எம். பி. [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)


வீடு விற்பனைக்கு

சகல வசதிகளும் கொண்ட மாடி வீடு.
இடம்: ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குழி.
தொடர்பு: 234, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7012, 7818, 235
4402


## ஒரு இளம் குடும்பம் சாவை அணைத்த பரிதாபக் 'கதை'!

புன்னாலைக்கட்டுவனில் நெஞ்சைநெகிழவைக்கும் சம்பவம்

(ஈ. கே. ஆர்.)

பற்றுப் பாசத்தோடு உயிருக்குயிராக, 'நினைவெல்லாம் நித்தியா' என்று தம் ஆசை மகளோடு வாழ்ந்த ஒரு இளம் குடும்பம் ஒன்றாகவே சாவை அணைத்துக்கொண்ட நெஞ்சத்தைப் பிழியும் சம்பவம் நேற்று புன்னாலைக்கட்டுவனில் நடந்தது!

மூன்று வருடம்கூட ஆகவில்லை. அந்தக் 'காதல் மலர்கள்' கைப்பிடித்து! அவர்களின் இனிய திருமண வாழ்வில் 'நித்தியா' என்ற முத்தொன்று உதிர்த்து ஏழு மாதம்கூட ஆகவில்லை! அதற்குள், இப்படி ஒரு சோதனை.

புன்னாலைக்கட்டுவன் அரசினர் வைத்தியசாலைக்குச் சமீபத்தில் வசித்து வந்தது இந்தக் குடும்பம்! உணர்ச்சியின் பிணைப்புகளாக வாழ்ந்தார்கள் அவர்கள்.

சி. நித்தியானந்தனுக்கு முப்பத்தொரு வயது. இருபத்தாறு வயது ஜெயலக்ஷ்மி அவரது மனைவி. இவர்களுக்கு மகளாக 'நித்தியா' ஏழு மாதத்

[8-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

E Y 4250 சோமசெற் கார் (சொந்தப் பாவிப்பிலுள்ளது) விற்பனைக்குண்டு. தொடர்பு: A. சுப்பிரமணியம் (சட்டத்தரணி), 6/2, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 4382

தெல்லிப்பழையில் மணியம் வீதியில் 4 பரப்புக் காணி. தொடர்பு: சண்முகநாதன், மதனகிரி, தபாற் கந்தோர் வீதி, தெல்லிப்பளை. 4396

புத்தம் புதிய வீடியோடெக் நெஷனல் (N V 7200 - E N) விற்பனைக்குண்டு. இ. ராஜன், ராஜமனை, சந்நிதி வீதி, அச்சுவேலி. 4390

சாவகச்சேரி சிவன் கோவிலடியில் வீட்டுடன் 3 பரப்புக் காணியும், கிணற்றுடன் 2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. [சந்தை, பஸ், புகையிரத நிலையம் அண்மையில்] சு. நல்லம்மா, சிவன்கோவிலடி, சாவகச்சேரி. 4379

## தேவை

மரத்தில் விளையாட்டுப் பொருட்கள் தயாரிக்கும் கடைச்சல் தொழிற்சாலைக்கு அனுபவமும் திறமையுமுள்ள தொழிலாளர் தேவை 10-9-82க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பரதாரர், திருக்கணித அச்சகம், சாவகச்சேரி. 4395

இல்லத்தில் தங்கியிருந்து பிள்ளைகளுக்கு கல்வி போதிக்கக்கூடிய ஒருவர் தேவை. 30 வயதுக்கு மேற்பட்டவராயும் G. C. E. பரீட்சையில் சித்திபெற்றவராகவும் இருத்தல் வேண்டும். உணவு, இருப்பிட வசதி வழங்கி சன்மானமாக குறிப்பிட்ட தொகை வழங்கப்படும். 5-9-82க்குமுன் பதிவுத் தபால் மூலம் விண்ணப்பிக்கவும். தலைவர், சைவச் சிறுவர் இல்லம், கைதடி. 4387

இல்லத்தில் தங்கியிருந்து பிள்ளைகளை மேற்பார்வை செய்வதற்கு மேற்பார்வையாளர் தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவராயும், சமய ஒழுக்கமுடையவராயும் இருத்தல்வேண்டும். உணவு, இருப்பிட வசதி வழங்கிசன்மானமாக குறிப்பிட்ட தொகை வழங்கப்படும். 5-9-82-க்கு முன் பதிவுத்தபால் மூலம் விண்ணப்பிக்கவும் தலைவர், சைவச் சிறுவர் இல்லம், கைதடி. 4386

# அறிவித்தல்

## மின் விநியோகம்

1982ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 2ம் திகதி வியாழக்கிழமையும், 4ந் திகதி சனிக்கிழமையும், 5ந் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலை 7-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணி வரை முக்கிய பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு கிளிநொச்சி - யாழ்ப்பாணம் மின் மார்க்கம் துண்டிக்கப்படவிருப்பதால் யாழ்ப்பாண பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகளில் மின்சார விநியோகம் தடைப்படும் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

மின்பொறியிலாளர்,
(யாழ். பிரதேசம்)
இலங்கை மின்சார சபை,
4331 சுன்னாகம்.

# சாகித்திய விழா நவம்பரில் நடைபெறும்

[கொழும்பு]

பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, சாகித்திய விழா, நவம்பர்மாதத்தில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை, சம்பந்தப்பட்ட மதியுரைக்குழுக்கள் பூர்த்தி செய்துள்ளன. முப்பெரும் விழாவாக நடைபெறவிருக்கும் இவ் விழாவில் இந்திய நடனமாமணி பத்மா சுப்பிரமணியம்; கர்நாடக அரசின் நாட்டிய மாமணி உட்பட பல இந்திய கலைஞர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். இவ் விழாவில் வைத்து சாகித்திய மண்டல விருதுகளை, ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன வழங்குவார். (கெ)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

1. சண்முகம் இராசையாவும் பெண்
2. சவுந்தராம்பிகையும் இருவரும்

கருங்காலி, காரைதீவு மேற்கு, தற்சமயம் சத்துரந்தை, களபூமி, காரைநகர்.

இல ஈடு / 399 எதிராக

விஞசித்தம்பி வைத்திலிங்கம்,

47-ம், இலக்கம் நாலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் MB / 399-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுச்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1982ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20ம் திகதி [20-9-82] திங்கட்கிழமை முற்பகல் 10மணியளவில் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபா 22,057/-ம் 28-07-1977 தொடக்கம் 26-01-1977 வரைக்கும் ரூபா 17,000/-க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுந்தொகைக்கும் இறக்கும்வரை 9 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 648-75. இதில் செலவுத்தொகை 532/-ஐக் கழித்தும் இத்துடன் 18-12-80ல் கொடுபட்ட ரூபா 10,000/ம் கழித்தும் இத்துடன் 4-9-81ல் கொடுபட்ட ரூபா 8000/-ம் கழித்து.

### ஆதனவிபரம்


வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், தீவுப்பகுதிக் காரைதீவு கோவிற் பற்று காரைதீவு கிழக்கு இறை சத்துரந்தை நில. பர. 8½ எட்டரையும் பனைகளும் வீடுகள், கிணறும் எல்லை கிழக்கு சந்தையா குணசிங்கத்துக்கும் முருகேசு தியாகராசாவுக்குமுரிய ஆதனங்கள் வடக்கு: முருகேசு தியாகராசாவின் ஆதனம் மேற்கு: தியாகராசா பெண் நீலாம்பிகைக்கும் பங்காளருக்கும், ஆறுமுகமும் கனகசபைக்குமுரிய வாதனங்கள் தெற்கு:ஒழுங்கை இதனடங்கலிற் சொரியலாய் 17/20இருபதில் பதினேழுடங்குமதற்குரியவைகளும்.

கந்தர் சிவஸ்கந்தா,
'நாகேந்திரமடம்', நீதிமன்ற விற்பனவு ஆணையாளரும்,
வட்டுக்கோட்டை, மதிப்பாளரும்,
24-08-82 4392

# 31-வது தின நினைவாஞ்சலி

## தம்பிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை

சுண்டிக்குளி



தோற்றம்: 5-11-1915 மறைவு: 3-8-1982

உமது மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரங்களின் இதய பூர்வமான அஞ்சலி.

4398 — குடும்பத்தினர்.

பூநகரி கடலேரியில்

# மீன்பிடிக்க வசதி செய்யவேண்டும்!

(சாவகச்சேரி)

பச்சிலைப்பள்ளிப் பகுதிக்கு அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட நிதி சில இடங்களில் இன்னும் பிரயோசனப்படுத்தப்படவில்லை எனவே அவற்றைச் செயற்படுத்தும் முறையில் சம்பந்தம்பட்ட ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டு அவற்றைநிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப் படவேண்டும்''

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையில் திரு. மு. இ. செல்லத்தம்பி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடந்த இக் கூட்டத்தில் தொடர்ந்து அவர் உரையாற்றும்பொழுது கூறியதாவது: பளைச்சந்தையில் மீன் விலை அதிகம் உயர்ந்துள்ளது. காரணம் தாளையடி மருதங்கேணி ஆகிய கடற்பிரதேசங்களிற்பிடிக்கப்படும் மீன்கள் யாவும் கிளிநொச்சிச்சந்தைக்கு அனுப்பப்படுவதே. எனவே புலோப்பளையில் இருக்கும் பூநகரிக் கடலேரியில் மீன்பிடிப்பதற்கு வசதிசெய்துகொடுக்கப்படவேண்டும். இதனால் இப்பகுதிப் பொதுமக்கள் பெரிதும் நன்மையடைவார்கள். [க]

# இன்றைய பலன்

ஆவணி மாதம் 16-ம் திகதி

புதன்கிழமை
(1—9—82)

மேடம்: தன்மான வாழ்வுடன் தனமும் சேரும். தாயின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். முயற்சியும் செய்தால் முன்னேற்றம் உண்டு.

இடபம்: கொள்கையில் அதிக பற்றுதல் ஏற்படும். இலட்சிய நோக்குடன் காரியம் ஆற்றுவீர்கள். இனசனகொண்டாட்டங்களுக்கு இடமுண்டு. பிள்ளைகளின் செல்வாக்கு வளரும்.

மிதுனம்: பகை மூட்டத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டு இருக்கிறீர்கள். சிறிய விடயத்துக்குக்கூட குறைகேட்க நேரிடும், முன்னேற்றத்தை தடுப்பதற்கு எதிரிகள் முனைவர்,

கடகம்: வாழ்க்கை இன்று மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். களஸ்திரவழிவால் நன்மைகள் சேரும். நீண்ட நாள் கனவு இன்று நினைவாவதற்கும் இடமுண்டு.

சிங்கம்: அதிக நம்பிக்கை ஆபத்தைத் தேடித்தராம் தன்னையே தனக்குதவி என்று செயலாற்றவும். மறைமுக எதிரிகள். உறவு விடத்தில் பிரியக்குறைவு ஏற்படும்.

கன்னி: பிதாவழியில்இருந்து மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு. தெய்வநம்பிக்கையில் அதிக ஆர்வம் ஏற்படும். புண்ணிய காரியங்களில் மனம் நாடும். நீண்டநாள் மனக்குறை இன்று நிவர்த்தியாகும்

துலாம்: எதிரிகள் மத்தியில் வீறுநடை போடுவீர்கள், தொழில் துறையில் புதிய உற்சாகம் பிறக்கும் பகைவர்கள் மத்தியில் ஏற்படும் மனமாற்றம் உங்கள் செல்வாக்கை வளர்க்கும்.

விருச்சிகம்: புதுமையான சம்பவங்கள் இடம்பெறும். சிலருக்கு அதிர்ஷ்ட லாபங்களுக்கும் இடமுண்டு. விருந்தினர் வருகை உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தவும் இடமுண்டு.

தனு: திருடர் பயத்துக்கு இடமுண்டு. தனிவழிப் பயணத்தை தவிர்த்துக் கொள்ளவும். தொழில் புரியும் இடத்தில் சகல தொழிலாளருடனும் ஒத்துழைப்பும் அவசியம்.

மகரம்: குடும்பத்தில் சுகக் குறைவு தென்படலாம். அதிக அலைச்சலின் மூலம் கவலைகள் உருவாகும். அவசரப் போக்கினால் பிறரைப் பகைத்துக் கொள்ளவும் நேரிடலாம்,

கும்பம்: பேச்சுவன்மையால் புகழ் கிடைக்கும். பெரிய இடத்துச் சகவாசம்உங்களுக்கு செல்வாக்கைத் தேடித்தரும். வரவிலும் உயர்வு காணும். சிலருக்கு அதிர்ஷ்ட லாபமும் கிடைக்கலாம்.

மீனம்: சகோதர வழியால் சஞ்சலங்கள் தோன்றக் கூடும். உள் வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும். அருமையான சந்தர்ப்பத்தை இழக்கநேரிடும் அயலவர்களுடன் அன்பாக நடந்துகொள்ளவும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## பாரதிவிழா ஒத்திவைப்பு

[மன்னார்]

மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபையினால் செப்ரம்பர் மாதம் 10 ஆம், 11ஆம் திகதிகளில் நடத்தப்படவிருந்த பாரதி நூற்றாண்டு விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளது இவ் விழா மீண்டும் செப்பரம்பர் மாதம் 25, 26 ஆம் திகதிகளில் கொண்டாடப்படும்.

இவ்வாறு கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை கூட்டத்தில் உரையாற்றிய மன்னார் மாவட்ட அபிவிருத் சபை தலைவர் திரு, பி. எம். செபமாலை தெரிவித்தார்.

## நிர்வாகிகள். தெரிவு

[அரியாலை]

அரியாலை மேற்கு காந்தி இளைஞர்கழக அங்குரார்ப்பணக்கூட்டம் தேசிய இளைஞர் சேவைமன்ற நல்லூர்த் தொகுதி அமைப்பாளர் திரு. க. முருகையா தலைமையில் நடைபெற்றது.

நிர்வாகிகள் தெரிவில் தலைவராக தா அரியரத்தினமும், உபதலைவராக திரு. பூ. யோகநாதனும், செயலாளராக திரு மு. விவேகானந்தனும் உபசெயலாளராக திரு. [illegible] செல்வராசவும் பொருளாளராக திரு. வ. விஷயராசாவும் 18 நிர்வாகசபை உறுப்பினரும் ஆலோசனைச்சபை உறுப்பினராக 7 பேர்களும் பதவி வழி ஆலோசனைச்சபை உறுப்பினராக அரியாலை மேற்கு கிராமசேவகர் திரு. மு [illegible]வாகனமும் தேசிய இளைஞர் சேவைமன்ற அமைப்பாளர் திரு. க முருகையாவும் தெரிவு செய்யப்பட்டனர். (

## காணிகள் வழங்கப்படும்

• புதுடில்லி ஆக. 31

கர்நாடகத்தில் 25,000ஏழை மக்களுக்கு 2250 ஏக்கர் காணியை யளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இதற்கென 60 கோடி ரூபா செலவிடப்படும். (க)

சென்னை, மதுரை கோயம்புத்தூரில்

# இலவச சத்துணவு திட்டம் செப்டம்பர் 15-ம்திகதிஅமுல்!

## ஆரம்பசெலவுக்காக 38 லட்சம்ரூபா அனுமதி

சென்னை, ஆக. 31

சென்னை மதுரை கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் செப்டம்பர் 15ம் தேதி இலவச சத்துணவுத்திட்டம் ஆரம்பித்து வக்கப்படும்.

இலவசச் சத்துணவுத் திட்டத்திற்கு இம்மூன்று நகரங்களுக்கும் ஆரம்பச்செலவாக சுமார் 38லட்சம் ரூபா செலவிட மாநில அரசு அனுமதி வழங்கியுள்ளது.

சென்னை நகருக்கு 23 லட்சமும், மதுரை நகருக்கு 7 லட்சமும், கோயம்புத்தூருக்கு 8 லட்சமும் வழங்கப்படும்.

இலவச சத்துணவுத் திட்டத்திற்கு அனைத்து நகர கூட்டுறவு வங்கி 9லட்சம் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

அனைத்துநகரக் கூட்டுறவு வங்கி பிரதிநிதிகள் கூட்டம் சேலத்தில், திரு, இராஜரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது இம்முடிவு எடுக்கப்பட்டதாக, சேலம் கூட்டுறவு வங்கித் தலைவர் திரு. கே. ராமசாமிப்பிள்ளை தெரிவித்தார்.

கூட்டுறவு வங்கியின் 6வது மாநாட்டை கோவையில் நடத்துவதென்றும், அம்மாநாட்டில் இந்நிதியை வழங்குவதென்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இலவசச் சத்துணவுத் திட்டத்திற்கு பல நிறுவனங்கள் நிதிவழங்கிவருகின்றன.

# இந்தக்கடைகளின் 'லைசன்ஸ்'ரத்தாகும்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறைப் பகுதியில் சுகாதாரக்கேடாக விளங்கும் தேநீர்ச்சாலைகள் இனிப்புப் பண்டங்களின் விற்பனை நிலையங்கள்மீது சுகாதாரப்பகுதியினர் தீவிர கண்காணிப்பு செலுத்தியுள்ளனர்,

காங்கேசன் துறையிலும் அதையடுத்துள்ள பகுதிகளிலும் உள்ள தேநீர்சாலைகள் இனிப்புப் பண்டங்களின் விற்பனை நிலையங்கள் சுகாதாரக்கேடான முறையில் இயங்குவதாக புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து காங்கேசன் துறை மாவட்ட அபிவிருத்திச்சபை உப அலுவலக சுகாதாரப் பரிசோதகர் திரு. ரி. மகாதேவன் இவ்வாறான நிலையங்களை தீவிர கண்காணிப்பு செலுத்தி வருகிறார்.

தேநீர்ச்சாலைகள், இறைச்சிக்கடைகள், இனிப்புப்பண்டங்கள், விற்பனை செய்யும் கடைகள் ஆகியவற்றைக் கண்காணித்து சுகாதாரக்கேடான நிலையை தவிர்க்குமாறு ஆலோசனை கூறுவதுடன் அதனை ஏற்காதவிடத்து அவற்றின் அனுமதிப்பத்திரத்தை ரத்துச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விக்கிரகங்கள் திருட்டை தடுக்க

# கோவில்களில் நவீன கருவிகள் பொருத்தப்படும்!

சென்னை, ஆக 3

கோவில்களில் விக்கிரகத் திருட்டைத் தடுப்பதற்கு நவீன கருவிகள் கோவில்களில் பொருத்தப்படவிருப்பதாக தஞ்சாவூரில் பொலிஸ் டைரக்டர் ஜெனரல் திரு. ராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் 600 பெண் பொலிசார் கடமையாற்றுவதாக அவர் தெரிவித்தார்.

நெடுஞ்சாலைகளில் விசேட ரோந்து ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மாணவர்களுக்கும் பொலிசாருக்குமிடையில் தற்போது போது சுமுகமான உறவு இருப்பதாகவும் அவர் கூறினார்.

மக்கள் தொகைக்கு ஏற்ப பொலிசார் அதிகரிக்கப்பட வேண்டுமென்பது பற்றி ஆராயப்பட்டுவருவதாகவும் மதுரை, திருச்சி மாவட்டங்களுக்குப் பொலிஸ் கமிஷனர் நியமிக்கப்படவேண்டுமென்பதும் மாநில அரசு கொள்கை அளவில் ஏற்றுள்ளதாகவும் அவர் கூறினார் க

சென்னை

### எக்ஸ் பிரஸ் தப்பியது!

சென்னை, ஆக. 31

புதுச்சேரியிலிருந்து புறப்பட்ட சென்னை 'எக்ஸ்பிரஸ்' தடம்புரளும் அபாயத்திலிருந்து தப்பியது.

ரயில்வே ஊழியர் எடுத்த முன் நடவடிக்கையால் இவ் விபத்துத் தவிர்க்கப்பட்டது. சிலிர்ப்பர் கட்டைகளும், தண்டவாளமும் ஓரிடத்தில் கழற்றப்பட்டிருந்தது முன்கூடியே கண்டுபிடிக்கப்பட்டது.

### 'லங்கா ஸ்ரீமதி' வெள்ளோட்டம்

லண்டன், ஆக 31

தென்கொரியாவில் கட்டப்பட்ட இலங்கையின் புதிய சரக்குக் கப்பலான 'லங்கா ஸ்ரீமதி' வெள்ளோட்டம் விடப்பட்டது. இவ்விழாவில் இலங்கை அமைச்சர் லலித் அத்துலத்முதலி கலந்துகொண்டார். இக்கப்பல் இலங்கை புறப்பட்டுள்ளது.

ஐ. நா. செயலாளர் நாயகம்

### முதல்தடவையாக சோவியத் விஜயம்!

(க)

லண்டன், ஆக. 31

ஐ நா, செயலாளர்நாயகம் முதல் தடவையாக சோவியத்திற்கு விஜயம் செய்யவிருக்கிறார்

செப்டம்பர் 10ம் தேதிக்கு முன்னர் ஐ. நா. செயலாளர் நாயகம் விஜயம்செய்வார் என 'தாஸ்' செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

சோவியத் ஜனாதிபதி திரு. பிரஷ்னேவ், வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் அவர் பேச்சுவார்த்தை நடத்துவார்.

மத்திய கிழக்கு விவகாரம், ஆப்கானிஸ்தான் பிரச்னை ஆயுதவிவகாரம் பற்றி அவர சோவியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் எனக் கூறப்படுகிறது,

(க)

### திருஞானசம்பந்தர் கால செங்கல் கட்டடம்!

சென்னை, ஆக. 31

இராமநாதபுரத்திலுள்ள ஒரு கிரமத்தில் திருஞானசம்பந்தர் காலத்து செங்கல் கட்டடம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒன்றரைஅடி நீளமும், அரைஅடி அகலமுமான செங்கற்களால் இக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது. 50 அடி தூரத்திற்கு இக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் இதே இடத்தில் பாண்டிய மன்னனான மஹாவர்மன் காலத்து கல்வெட்டு ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. (க)

# "அபிவிருத்தி திட்டங்களை பிரதேச சபையே தயாரிக்கும்

## சாவகச்சேரி எம். பி. தகவல்

(சாவகச்சேரி]

''இப்பகுதியில் ஒரு கருமத்தைத் தனியே சாதிக்கக் கூடிய வர்த்தகப் பிரமுகர்கள் இருந்தும், எல்லோரினது பங்கும் இப்பொது விடயத்திற்கு அத்தியாவசியமெனக் கருதி ஒற்றுமையாக இச் சிரமதானப்பணியிற் கலந்து கொண்ட உங்களை மனதாரப் பாராட்டுகின்றேன்''

சரசாலை வடக்கு கொம்பிகுளமயான சிரமதான வேலையை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் சாவகச் எம்.பி. திரு. வி. என். நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

சரசாலைக் கிராமோதயசபை தலைவர் திரு. த. சபாநாயகம் தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் சாவகச்சேரிப் பிரதேச சபைத் தலைவர் திரு. கா. வே. முத்துக்குமாரசுவாமி, சனசமூகநிலையத் தலைவர் திரு. வ. யோகநாதன், அயற்பிராந்திய கிராமோதய சபைத் தலைவர்கள், உட்படச் சுமார் 75பேர் வரை சிரமதானத்திற் கலந்து கொண்டனர்.

திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் தனது தொகுதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 25 லட்ச ரூபாவில் 12 லட்ச ரூபாவை நடப்பாண்டிலும் கடந்த காலத்திலும் ஆரம்பிக்கப்பட்ட முடிவடையாத வேலைகளுக்கும், எஞ்சிய 13 லட்ச ரூபாவை சாவகச்சேரித் தொகுதியிலுள்ள 23 கிராமோதய சபைகளுக்கும் சமபங்காகப் பகிர்ந்து அபிவிருத்தி வேலைகளுக்காக ஒதுக்குவதாகவும் உறுதியளித்தார்.

இனிமேல் நிதி ஒதுக்கீடுகள் யாவும் பிரதேச அபிவிருத்திச் சபைகளுக்கூடாகவே இருக்கும் அபிவிருத்தித் திட்டங்களைப் பிரதேச சபையே தயாரிக்கும்.

வண்ணாத்தி பாலத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் நன்னீர் திட்டத்திற்கு எடுக்கும் நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிட்டு, இதுபற்றி உங்கள் கருத்துக்களை சம்பவம் பற்றி ஆராயவிருக்கும் குழுவுக்குத் தெரிவிக்குமாறு குறிப்பிட்டார்.

தலைவர் திரு. சபாநாயகம் தமது ஆரம்பவுரையில் மயானத்தில் பொதுக்கிணறு ஒன்று அமைப்பதற்கு நிதி உதவியவர்களைப் பாராட்டினார்.

பொதுநல அமைப்பு

### நாடுகளின் நிதி அமைச்சர் மாநாடு

லண்டன், ஆக. 31

உலகின் பொருளாதாரம் வளம்பெற சர்வதேசரீதியில் செயல்படவேண்டுமென்று பிரிட்டிஷ் நிதி அமைச்சர் திரு ஜில் றிரோ லண்டனில் நடந்த பொதுநல அமைப்பு நாடுகளின் நிதி அமைச்சர்கள் மாநாட்டில் கூறினார்.

நைஜீரிய நிதி அமைச்சர் பேசுகையில், எண்ணை வள நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்குமிடையில் பொருளாதார ரீதியில் போட்டி ஏற்பட்டிருப்பதாகக் கண்டனம் தெரிவித்தார்.

சர்வதேசரீதியில் புதிய ஒத்துழைப்பு அவசியம் என்றும் அவர் கூறினார். [க]

மலேசியாவில்

### 107 கைதிகள் விடுதலை!

கோலாலம்பூர், ஆக. 31

மலேசியாவின் 25-வது சதந்திரதின விழாவை முன்னிட்டு 107 கைதிகள் விடுதலைசெய்யப்பட்டனர்.

உள்நாட்டு பந்தோபஸ்துக் குறித்துத் தடுத்துவைக்கப்பட்டிருந்த 58 பேரும் இவர்களில் அடங்குவார்கள். (க)

நிலக்கரிப் பிரச்னை:

### கமிட்டி நியமனம்

சென்னை, ஆக. 31

அனல் மின்சார நிலையங்களுக்கு நிலக்கரி விநியோகம் பற்றிய சில அம்சங்களை ஆராய்வதற்காக ஆறு பேர் கொண்ட கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது,

திட்டக்கமிஷன் உறுப்பினர் திரு. மகபட் இக்கமிட்டிக்குத் தலைமைதாங்குவார்.

தரம்குறைந்த நிலக்கரி விநியோகிக்கப்படுவதால், உற்பத்தி பாதிக்கப்பட்டுவருவதாகச் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுககப்பட்டுள்ளது.

பாலஸ்தீன விடுதலை இயக்க

# தலைவர் யாஸீர் அரபாத் கிரேக்க் நாடு புறப்பட்டார்!

பெய்ரூட், ஆக. 31

பாலஸ்தீன் விடுதலை இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத் மேற்கு பெய்ரூட்டைவிட்டு புறப்பட்டுச்சென்றார்!

பெய்ரூட் துறைமுகத்திலிருந்து கப்பல் ஒன்றில் பயணமான அரபாத்தை அவரது ஆதரவாளர்களும், பத்திரிகையாளர்களும் கடைசி நிமிடம் வரை சூழ்ந்து நின்றுகொண்டிருந்தார்கள்.

''வெற்றிபெறும்வரை எமது போராட்டம் தொடரும்'' என்று தெரிவித்த அரபாத் கிரேக்க நாட்டை நோக்கிப் பயணமானார்!

இதுவரை இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் மேற்கு பெய்ரூட்டை விட்டுச் சென்றுவிட்டனர்.

கடந்தசில காலமாக மறைமுகமாக இருந்த அரபாத் கிரேக்க நாட்டை நோக்கிச் செல்வதற்குமுன்னால் பல தலைவர்களையும் சந்தித்து உரையாடிவிட்டே பயணமாகியுள்ளார்.

தி. மு. க.

### உறுப்பினர் காலமானர்

சென்னை, ஆக. 31

தி. மு. க.முன்னாள் சட்ட சபை உறுப்பினரான திரு. பொன்னுமலை நேற்று சேலத்தில் காலமானர். இவர் 1967 முதல் 1977 வரை சட்ட சபை உறுப்பினராக இருந்தார். (க]

**மணிவாக்கு**

எந்த மனிதனும் பிழை விடுவது இயல்பு; ஆனால் அதனைச் சரியென்று பிடிவாதமாய் நிற்பவன் மடையன். — சிசெரோ.

# நமது நோக்கு

## யாழ்ப்பாண மனித வளம்

அபிவிருத்திக்கு ஆதாரமானது மனித வளம். எந்த அற்புதமான தொழில்நுட்ப சாதனத்தையும் கண்டு பிடித்தவன் மனிதனே! அதனை இயக்குபவனும் மனிதனே!

நாட்டின் அபிவிருத்தி பற்றிப் பேசும் போதெல்லாம், திட்டங்கள், திட்டங்களுக்குரிய மூலதனம், நிதி உதவி, தொழில்நுட்ப சாதனம், விஞ்ஞானசெயல்முறை, உற்பத்தி, வர்த்தகம், போன்ற பலவகைப்பட்ட அம்சங்களில் நாம் அமிழ்ந்தி விடுவது சாதாரணம்.

அபிவிருத்தி என்ற சொல்லே, மேனாட்டுப் பொருளாதார அடிப்படைக்குரியதாய் விட்டது; எனவே மேனாட்டு முறைகளே அபிவிருத்தித் திட்டங்களில் 'காபபி' அடிபடுவது நம் காணும் அனுபவம்.

தொழிற்சாலைகளை கட்டி எழுப்புவதும், பெருந்த வீடமைப்புத்திட்டங்களும், உற்பத்தி சாதனங்களுக்குரிய தளபாடங்களை இறக்குமதி செய்வதும் – இவைகளு மேலாக ஒரு பரந்த வெளியில், சுகம்பேசும் கடற்கரைக்கணித்தாய் ஒரு கப்பீரமான ஐந்து மாடி ஹோட்டல் அமைப்பதுமே அபிவிருத்தியெனக் கருதப் படுகிறது.

யாழ்ப்பாண அபிவிருத்தி குறித்து அண்மையில் இப்பத்திரிகையில் எழுதியநாம் யாழ்ப்பாண மனித வளம் அந்த நாணயத்தின் மறுபுறமென்பதைச் சுட்டிக் காட்டத் தவறிவிட்டோம்.

எந்த நாட்டின் அபிவிருத்திக்கும் அந்த நாட்டின் மனித வளமே அவசியமானது; ஆனால் இன்று நாம் உலகில் காணும் நூதன காட்சிகளில் இது முழு உண்மையெனக் கொள்ள முடியாது.

செல்வம் கொழித்த மலேஷியாவிலும், உலோக கனிப்பொருள் வளம் நிறைந்த நைஜீரியாவிலும், எண்ணெய் வளம் நிறைந்த அரபு நாடுகளிலும், அவுஸ்திரேலியாவிலும் அபிவிருத்திக்குரியமனிதவளம்இறக்குமதியால் கிடைக்கின்றது.

கல்வி, செல்வம், தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்த அபிவிருத்தியடைந்த நாடுகளான அமெரிக்காவிலும்பிரிட்டனிலும்வேறுசில ஐரோப்பிய நாடுகளிலும், பொறியியல், மருத்துவம், கணக்கியல் போன்ற துறைகளில் காணப்படும் பற்றாக்குறைக்கு மனிதவளம் இறக்குமதி செய்யப்படுகின்றது.

நாம் குறிப்பிட்ட நாடுகளில் பயன்படும் யாழ்ப்பாண மனித வளத்தக்கு மதிப்பும கிராக்கியும் இருந்ததும், இன்றும் இருக்கின்றதும் பகிரங்க ரகசியம்.

எனவே யாழ்ப்பாண மனிதவளத்துக்கு ஒருதனிச் சிறப்பு உண்டென்பதை விளங்குவதோ, விளக்குவதோ தேவையற்றது.

ஆயினும் இதில் என்ன அவசிய தேவையானது?

நாட்டில் ஒரு பகுதியான யாழ்ப்பாணத்தை, ஒரு சிறு பிரதேசமென்றும, ஒரு குடா(கிடாய்) நாடென்றும் தென்னிலை வேலியால் திரை போடபப்பட்ட தனிப் பிர (பர?) தேசமென்றும்; எனவேயாழ்ப்பாணத்தவன் (Jaffna man) ஒரு விபரீதமான பிறவியென்றும் இந்த நாட்டில் கேலியாகப் பேசப்படுவது எவ்வாறென்பதை உணர்ந்து அதற்கு 'மறுத்தான்' கொடுப்பது அவசியமானது.

எங்கு, எவ்வாறென்பதை நாம் விளங்கிக் கொள்வது அவசியம். பாராளுமன்றத்திலும் பகிரங்கக் கூட்டத்திலும் அல்ல!

வேட்டி உடை; நல்லெண்ணெய், சுருட்டு, பனைப்பதநீர்–இவை போன்ற சின்னங்களை நகைச்சுவைக்கு பயன்படுத்தும் நம் சிங்கள சகோதரர்கள்–இவற்றின் பெருமையை அறியாதவர்களல்லர்; ஆனால் இந்தப் பெருமைக்கு அடிப்படையாயுள்ள தத்துவதத்தை சிங்கள மக்கள் மட்டுமல்ல, பல தமிழ் மக்களேபுரியாத நிலையில் இன்னும் இருக்கின்றனர். காலம் புகட்டும்.

யாழ்ப்பாண ன் தின் மிகமோசமான அம்சம், தமிழ் மக்களென் தம்மைக் கூறும் 'நிர்ப்பந்தம்' உடையவர்கள் இந்த அடிப்படைத் தத்துவத்தைப் பரிகசிக்குமளவில் வாழ்ந்து வருகின்றனர். நல்லெண்ணெயில் நம்பிக்கையற்றவர்கள்; புளியெண்ணெயில் சுகம் காண்பார்.

'சிங்களம் மட்டும்' என்ற சட்டம் உருவானதில் 'ஆச்சரியமில்லை; அது இவ்வளவு காலம் அதே நிலையில் கையாளப்படுகிறதே என்பதுதான் ஆச்சரியம்; அவலம் கலந்த ஆச்சரியம்.

மக்கள் தம் கருத்தை வெளியிடுவதற்கு உரியதொரு வெறும் கருவியாகவே மொழி கருதபபட வேண்டுமென்று சில அரசியல் வதிகள் கருதி வந்தனர்.

ஆனால் தமிழ் மக்கள்—சிறப்பாக யாழ்ப்பாண மக்கள் தமிழை ஒரு சாதாரண கருவியாகக் கருதுவதில்லை; காரணம், தமிழ் மொழியினைத் தெய்வீக நலம் சாற்றும் மொழியாகச் சான்றோர் அனைவரும் கருதி வந்தனர்; கருதி வருகின்றனர்.

தமிழ் நாட்டிற் பிறந்த திருவள்ளுவர் என்னும் மெய்ஞ்ஞானச் செல்வர் எந்நாட்டுக்கும் உரியவராய் விட்டார்; சேரநாட்டின் செல்வத்திலும் செந்தமிழ்ச் செல்வமே சிறந்ததெனத் தெளிந்து இளங்கோவடிகள் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் இயற்றினார்.

இவற்றையெல்லாம்விளக்கிய பாரதியார் இன்று நூற்றாண்டு விழாக் காண்கின்றார்; பாரதியாரின் பணியைத் தலைமேற்கொண்டு உலகனைத்தும் தமிழ் பரப்பியவர் தனிநாயக அடிகளார்; இன்று அவருடைய இரண்டாவது ஆண்டு நினைவு தினம்.

தமிழ்மொழியில்வளர்ந்து அதன் அறநெறியில் நம்பிக்கை கொண்டு வாழும் யாழ்ப்பாண மக்கள், தனித்துப் போனார்களே என்று கவலை கொள்வது வீணாகும்; அறம் பனைபோல் நிமிர்ந்து நிற்கும் அரசியல் சகடக் கால்போல் சுழலும்,

# சமூகமுன்னேற்றக்கழகங்கள் சமாசத்தின் சாதனைகள்

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் 27 ஆரம்ப நிலை சமூக முன்னேற்றக் கழகங்களை அங்கத்தவர்களாகக் கொண்ட ஒரு ஒன்றியமாகும். இச்சமாசத்தின் முன்னோடிகள் 1980ம் புரட்டாதி மாதம் 12ம் நாள் ஆரம்பித்த சமூக எழுச்சி இயக்கத்தின் பயனாக பல ஆரம்பநிலைக் கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டு அவற்றின் இணைப்பாக 1981ம் ஆண்டு சித்திரை மாதம் 15ம் நாள் சமூக முற்னேற்றக் கழகங்களின் சமாசம் நிறுவப்பட்டது. இச்சமாசம் மக்களின் சமூக பொருளாதார எழுச்சியையும் வளர்ச்சியையும் அடிப்படை நோக்கங்களாகக் கொண்டு ஆறு அம்சத் திட்டத்தை உறுதுணையாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

நிறுவன ரீதியான தலைமையின்மூலம் மக்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டுதல சமாசத்தின் முதலாவது திட்டமாகும். சமாசத்தின் அங்கத்துவ கழகங்கள் மாணவர் கல்வி, வளர்ந்தோர் கல்வி, சிறு கைத்தொழில், ஐக்கியம், உடல், உள்ளம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் இது உழைத்து வருகின்றது. இக் கழகங்கள் நூலகச்சேவை, மாணவர் படிப்பகச்சேவை, கலைமன்றச் சேவைகள் மூலம் மக்களின் உயர்வுக்கு பணிபுரிந்து வருகின்றது.

சமாசத்தின் இரண்டாவது திட்டம் கல்வியை மையமாகக் கொண்டது. பட்டினி கிடக்க நேரினும் குறைந்தபட்சம் 10ம் வகுப்புவரை பிள்ளைகளைப் படிக்கவைக்க வேண்டும் என்ற பிரதான குறிக்கோளை முன்வைத்து பின்தங்கிய வசதியற்ற பிள்ளைகளுக்கு உற்சாகமும், உதவியும் வழங்கி வருவதுடன் பெற்றோர்களிடம் ஒரு மனமாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பிரச்சாரத்தையும் செய்துவருகின்றது.

1982ம் ஆண்டு மாசி மாதம் 3ம் தேதியிலிருந்து சிறுவர் வாரம் ஒன்றை சமாசம் கொண்டாடி கல்வியின் அவசியத்தை துண்டுப்பிரசுரங்கள் மூலமும் எழுச்சிக் கீதங்கள் மூலமும், எழுச்சிக் கூட்டங்கள் மூலமும் விளக்கியுள்ளது.

வசதியற்ற பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவியளித்தற் பொருட்டு சமாசம் கல்வி நிதியம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. இந் நிதியத்தில் சேர்ந்த பணமாகவும் இருப்புக்கொண்ட பணமாகவும் 25,000 ரூபா வரை இன்று உண்டு. இந்நிதியத்தின் குறுகியகால இலக்கு ஒரு இலட்சமாகும். இப்பணத்தை முதலீடு செய்யும் அதன் வருமானத்திலிருந்து கல்விச் சேவைக்கு உதவுவதே கல்வி நிதியத்தின் நோக்கமாகும்.

குப்பி விளக்கில் படித்து பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்ற ஒரு சகோதரிக்கும் வறுமையின் கொடுமைக்கு எதிராகப் போராடி எம். ஏ. படிப்பைத் தொடருகின்ற இன்னொரு சகோதரிக்கும் உதவியாக முதலாண்டுச் செலவுக்கான நிதியினை இவ்வாண்டில் சமாசம் செலுத்தியுள்ளது

யாழ். மத்திய கல்லூரியில் 13–10–81ல் கல்வி அறிவுப் போட்டியையும் 5–7–82ல் நாடகப்போட்டியும் நடாத்தி சமாசம் கல்வி, நாடக வளர்ச்சிகளுக்கு ஊக்கமளித்து வருகின்றது.

**இ. மு. நாகலிங்கம்**

[தலைவர்–: ச. மு. க. சமாசம்]

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் மூன்றாவது கொள்கைத் திட்டம் பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாகக்கொண்டது. மக்கள் பரம்பரையாக ஒரே தொழிலைச் செய்யப்பிறந்தோமென்ற மனோ நிலையையும் பாரம்பரிய தொழில் முறையையும் மாற்றி தொழிலறிவை வளர்த்து பல்வேறு தொழில்களில் ஈடுபடுத்துவதன் அவசியத்தை அங்கத்தவர் மத்தியில் எழுச்சிக்கூட்டங்கள், துண்டுப்பிரசுரங்கள் மூலம் சமாசம் நடாத்திவருகின்றது.

சிறு கைத்தொழில் இலாகா, கைத்தொழில் அபிவிருத்திச் சபை பனம் பொருள் அபிவிருத்திச் சபை ஆகிய அரச நிறுவனங்களின் உதவியுடன் சிறு குடிசைத் தொழில்களில் பல வித பயிற்சிகளையும் சமாசம் அளித்து வருகின்றது. கைத்தொழில் துறைக்கென அனுபவமும் பயிற்சியும் பெற்ற ஒரு பணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் பப்படம் தயாரித்தல், பற்பொடி தயாரித்தல், தும்புப்பொருள் தயாரித்தல், பின்னல் வேலைகள் போன்ற துறைகளில் சமாசம் பயிற்சி அளித்து வருகின்றது எமது பணிப்பாளரின் பயிற்சியின் பேறாக 'காய்ஸ்' என்ற வர்த்தகப் பெயருடன் பலவிதமான கைத்தொழிற் பொருட்களைச் செய்து சந்தையில் சிறந்த இடத்தையும் சமாசம் பிடித்துள்ளது.

கைத்தொழில் துறைகளில் ஊக்கமளித்தற்பொருட்டு ஒன்பது வகையான கைத்தொழில் போட்டிகளையும் 16–5–82ல் யாழ். மத்திய கல்லூரியில் சமாசம நடாத்தியுள்ளது.

சமாசத்தின் நான்காவது கொள்கைத்திட்டம் தமிழ்ச் சமூகத்தின் சாபக்கேடாக நிலைபெற்றிருக்கும் சமூகக் குறைபாடுகளை ஒழித்து சம உரிமைபெற்ற ஒரு சமுதாய அமைப்புக்கு வழிகாணபதாகும். நிலப்பிரபுத்துவ முறையின் நிலைக்களனாக விளங்கும் குடிமைத் தொழில் முறையை முற்றாகநீக்குவதன் மூலமே சமூகக் குறைபாடுகளை வேரோடு களையலாம் என்பது சமாசத்தின் அசைக்கமுடியாத நம்பிக்கைஆகும். இதற்கான பிரசார இயக்கத்தையும் சமாசம் செயற்படுத்திவருகின்றது.

சமாஜத்தின் கொள்கைத் திட்டங்களில் ஒன்று ஒழுக்கக் கட்டுப்பாட்டை அங்கத்தவர்கள் மத்தியில் வளர்ப்பதை நோக்கமாகக்கொண்டது. நல்லன பேசல், நல்லனசெய்தல், புறங்கூறாமை, மதுவை ஒழித்தல், சமூக பொதுவைபவங்களில் சிக்கனம், நேரக் கட்டுப்பாடு, எளிமை ஆகியவற்றை ஒழுக்கக்கோவையில் அடக்கியுள்ளோம். கல்வி வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி, ஐக்கிய வளர்ச்சி, உடல்வளர்ச்சி ஆகியவற்றுடன் மனவளர்ச்சியும் இணையும்போதுதான் மனிதன் மனிதனாக மதிப்புப் பெற்று சமூகத்தில் உயரமுடியும். அதுவே இம்மைக்கும், மறுமைக்கும் நன்மைபயக்கும் மனவளர்ச்சிக்கு உயர்ந்தஒழுக்கக் கட்டுப்பாடு இன்றியமையாததாகும். உடல்மனவளர்ச்சிக்கு நன்குஉதவக்கூடியகூட்டு யோகப்பயிற்சிமுறை பயிற்றுவிப்பதில் நாம் கூடிய கவனம் செலுத்திவருகிறோம். எமது அங்கத்துவ கழகங்களும் விசேட பயிற்சி வகுப்புகளை நடாத்திவருகின்றது.

இத்தகைய சாதனைகளின் மத்தியில் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாஜம் தனது 27 அங்கத்துவ கழகங்களின் பேராதரவுடன் எழுச்சி இயக்கத்தில் இரண்டாவது ஆண்டு விழாவையும் சமாசத்தின் முத

[5–ம் பக்கம் பார்க்க]

## யாழ். இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் ஆசைப்பிள்ளை

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் முன்னைநாள் அதிபர் வி. எம். ஆசைப்பிள்ளை சிறந்த கல்விமான் மாத்திரமன்றி பல்வேறு திறமைகளைப் பெற்றிருந்த பெரியாருமாவார். அவரது மறைவு கல்வி உலகுக்கு பெரும் இழப்பாகும். திரு. வி. எம். ஆசைப்பிள்ளை ஆரம்பக்கல்வியை யாழ் மத்திய கல்லூரியில் பெற்றார். லண்டன் மெட்றிகுலேஷனில் முதல் பிரிவில் சித்தியெய்தி 1921ம் ஆண்டு இலங்கைப்பல்கலைக்கழகத்தின் பிரவேச புலமைப்பரிசிலைப்பெற்று அங்கு சேர்ந்தார். முதல் பிரிவில் லண்டன் பி. எஸ் ஸி. பட்டம் பெற்று கணிதத்துறையில் உதவி விரிவுரையாளரானார். பொறியில்துறையில் புலமைப் பரிசில் பெற்று இங்கிலாந்து சென்ற அவர் லண்டன் இம்பீரியல்கல்லூரின் பொறியியல் துறையில் பி. எஸ். ஸி பட்டம் பெற்றார். 1931ம் ஆண்டு இலங்கைக்குத்திருப்பிய அவர் யாழ்ப்பாணம் பரமேஸ்வரா கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார். பின்னர் உதவி அதிபராக நியமனம் பெற்றார்.

193?ல் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி உப அதிபரான திரு. ஆசைப்பிள்ளை 1953ம் ஆண்டு அக்கல்லூரியின் அதிபரானார். 1961ல் பதவியிலிருந்து ஒய்வு பெற்றார்.

அவரது பதவிக்காலத்தில் கல்லூரி பல்வேறு துறைகளிலும் கணிசமான வளர்ச்சியைக்கண்டது. அவர் காலத்திலேயே அக் கல்லூரி சிரேஷ்ட தரத்தைப் பெற்றுக்கொண்டதுடன் பின்னர் அகில இலங்கை ரீதியிலான சிரேஷ்ட தரத்தை எட்டியது.

## சந்நிதி வேலா போற்றி

பன்னிரு கையாபோற்றி பார்வதி பாலா போற்றி
முன்னிய கருணை செய்யும் முருகனே குகனேபோற்றி
பின்னிய பிறவி வாரிப் பிணிப்பினைத்தீர்க்கும் செல்வச்
சந்நிதி வேலே ஞான சண்முகா போற்றி போற்றி

தேவர்கள் பூசை செய்த சீர்தரு தொண்டை யாற்றூர்ப்
பூவர சடியில் வேதப் பொன்னடி வைத்தாய் போற்றி
சீவர்களுய்ய நித்தம் திருவமு தளிக்க வைத்த
காவடி வேலா செல்வக் கந்தனே போற்றி போற்றி

தாயினும் சிறந்ததேசம் தாங்கிநின் அடியார்க்கென்றும்
நோயின்றி வறுமையின்றி நுவல்தரு கவலையின்றி
பேயின்றி மானய பற்றுப் பிறிதின்றி காப்பாய்போற்றி
மாயன்தன் மருகா செல்வ வடிவேலா போற்றி போற்றி

அருட்கவி:
சி. விநாசித்தம்பி

# பெயரில் மாணிக்கர் செயலில் மணியானவர்



இலங்கையின் கல்வி வளர்ச்சியில் அயராது உழைத்த புகழ் பூத்த பெரியார்களில் ஒருவர் திரு. தில்லைநாதன் மாணிக்கவாசகர் அவர்கள். இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பார்கள். திரு. தில்லைநாதன் மாணிக்கவாசகரது இளமைக் கல்வி, அவரது மேற்படிப்புக்கு உற்சாகமூட்டியது என்றால் மிகையாகாது.

பட்டதாரியாகிய திரு. மாணிக்கவாசகர் ஆசிரியராகி பின்னர் பல துறைகளில் வியத்தகு சேவைபுரியக்கூடிய கல்வித்துறையில் முக்கிய உத்தியோகங்களை வகித்து ஈற்றில் இலங்கைக் கல்விச்சேவையின் முதலாவது தரத்தில் கல்வி அமைச்சின் கல்விமேற்பார்வை முகாமைத்துவப் பிரிவின் திணைக்களத் தலைவராய்ப் பணிபுரிந்து ஓய்வுபெற்றமை ஈண்டு விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

பாடசாலைப் பரிசோதகராகப் பல பாகங்களில் பணிபுரிந்த இவரை அரசாங்க சேவைக்குழு ஆங்கிலக் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்த்தியது. இக்காலங்களில் ஆசிரியர் மத்திய மாற்றக்குழுவின் உறுப்பினராகவும் திறமையுடன் பணிபுரிந்தார். ஆங்கில பாடநூலாக்கக் குழுவிலும், தமிழ் இந்து பாடநூல் ஆலோசகர் குழுவிலும் இருந்து ஆற்றிய பணி பிரசித்தமானது. அவரது உன்னதமான சேவை அவரைப் பிரதம கல்வி அதிகாரி பதவிக்கு உயர்த்தியது. தொடர்ந்து கல்வி அதிபதியுமானார்.

'நாட்டுக்கு நல்லதை நல்ல படிசெய்யவேண்டும்' என்றசித்தாந்தத்தில் பெரிதும் நம்பிக்கையுடையவராகிய திரு. மாணிக்கவாசகர் பரமேஸ்வராக் கல்லூரி வளாகமட்டத்துக்குத் தரம் உயர்த்திடும் பணியில் வடமாநிலக் கல்வி அதிபதி என்ற தோரணையில் சிறப்பாக இயங்கினார்.

வளர்ந்துவரும் பல்கலைக் கழகம் பரமேஸ்வராக்கல்லூரி மண்ணியில் இடம்பெற திரு. மாணிக்கவாசகர் எடுத்த நடவடிக்கைகள் மிகவும் சிறந்தனவாயமைந்தன.

பிராந்திய கல்விப்பணிப்பாளராக வடக்குக் கிழக்குப் பிராந்தியங்களிலே எட்டாண்டுகள் பணிபுரிந்திருக்கின்றார். இக்காலங்களில் வேறு பல கல்விப் பணிகளையும் புரிந்திருக்கின்றார்.

தமிழ் ஆங்கிலம் இரு மொழிகளிலும் நல்ல பாண்டித்தியமுடையவரான திரு. மாணிக்கவாசகர் எந்தக் கருத்தரங்குகளிலும் எந்தப் பொது மேடைகளிலும் எதையும் அளந்து பேசும் இயல்புடையவர். எடுத்துக்கொண்ட பொருள்களின் அடிநாதமான கருத்து நேயர்கள் நெஞ்சில் பதியக்கூடியதாய் தூக்கி விலை உரைக்கும் வாக்கினில் வல்லவராயிருந்தார். இலங்கை வானொலியில் திரு. மாணிக்கவாசகர் கல்வி சம்பந்தமாய் ஆற்றிய உரைக்குறிப்புக்கள் பெரிதும் பேணப்படவேண்டியவை!

இசைத்துறையில் முற்காலங்களில் பண்ணிசைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லையென்றே கூறலாம். இலங்கையரசு வட இலங்கைச்சங்கீத சபை மூலம் பண்ணிசைக்கும் தகுந்த இடம் அளிக்க முன்வந்தமை மிகவும் பாராட்டுக்குரியதாகும். திரு. தி மாணிக்கவாசகரின் அநுசரணையுடன் கொக்குவில் ஞான பண்டிதர் வித்தியாசாலையில் இயங்கி வந்த பண்ணிசை மன்றத்தில் திருமுறைகளில் நன்கு பயிற்சி மிக்கவரான கொக்குவில் புலவர் மணி த குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் முக்கிய உறுப்பினராக இருந்து பண்ணிசை விளக்கஞ் செய்துவந்தமை குறிப்பிடத்தக்கது.

1954ல் நாவலப்பிட்டியில் நடந்த திருக்குறள் மகாநாடு உன்னதமாய் விளங்க உழைத்த பெருமையும் திரு. மாணிக்கவாசகருக்குண்டு.

இலங்கை நிருவாகச்சேவை அதிகாரிகள் சங்கத்தின் தலைவராக இருதடவைகள் சேவையாற்றிய திரு. மாணிக்கவாசகர், இலங்கை நிருவாகச் சேவையினையொத்த கல்விச் சேவையும், மூன்று தெளிவான தரங்களைக் கொண்டிருக்கவேண்டும் என்றுபோராடி வெள்ளையறிக்கையின் மூலம் இதனை அமைச்சு ஏற்றுக் கொள்ளவுஞ் செய்தார்

பிரதிக் கல்வி அதிபரின் கடமைகளைக் கவனித்துவந்த திரு. மாணிக்கவாசகர் அவர்கள், கொழும்புத்திட்ட புலமைப்பரிசில் நிகழ்ச்சியின்கீழ் அவுஸ்திரேலிய சிட்னி பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம் கற்பித்தல் தொடர்பாக பின்துறைப்படிப்பிலும் வெற்றி கண்டார்.

சைவாசார ஒழுக்கங்களில் மிக்கவரான திரு மாணிக்கவாசகர் தமது சேவைக்காலத்தில் ஏனைய மதவாதிகளிடையே எவ்வித காழ்ப்புமின்றிச் சேவை செய்தமை அவரது விசேட தன்மையாகும். இன மத மொழி பேதத்துக்கு இடமில்லாத கல்வியுலகில் திரு. மாணிக்கவாசகர் அவர்கள் ''மாணிக்கர்'' என்று அன்பாக அழைக்கப்பட்டார். அவரது முயற்சிகள், நடவடிக்கைகள் யாவும் மணியாகவே திழ்ந்தன எனலாம்.

அ. பஞ்சாட்சரம்

---

## சமூக....

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

லாவது ஆண்டுவிழாவையும் 1982ம் ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் முதலாம் நாள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சிறப்பாகக்கொண்டாட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. காலை 9மணி தொடங்கி நண்பகல் 12 30 வரை நடைபெறும். பாராளுமன்ற எதிர்க்கட்சி முதல்வர் மாண்புமிகு திரு. அ. அமிர்தலிங்கம், பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். யாழ்.மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவிருக்கின்றார்கள்.

காலை நடைபெறவுள்ள மகாநாட்டில் பல முக்கிய பிரேரணைகளும் ஆராயப்படவுள்ளன.

---

## கோழி வளர்ப்பு பற்றியகருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

கோழி வளர்ப்பு பற்றிய கருத்தரங்கு ஒன்று பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது

யாழ். தேசிய கூட்டுறவுச் சபை, திருநெல்வேலி விவசாயப் பாடசாலையுடன் இணைந்து இக்கருத்தரங்கினை நடத்துகின்றது. (கி)

---

# பாரம்பரிய பிரதேசத்தைக் காப்பதே எமது முதல்கடமை

## திருமலையில் நல்லூர் எம். பி.

(ரி.விவேகராசா)

''ஜனாதிபதி தேர்தலில் யார் வந்தாலும் சரி இந்த வி. கூட்டணிக்கு எந்தவித அக்கறையும் இல்லை. தமிழ்பேசும் மக்கள் அனுசரிக்க வேண்டிய வழிவகைகள் பற்றி கூட்டணி பொதுச்சபையே எல்லா முடிவையும்எடுக்கும் எமது முதல் கடமை எமது பாரம்பரிய பூமி பாதுகாக்கப்படவேண்டியது ஆகும்''

த. வி. கூட்டணி தலைவரும் நல்லூர்த் தொகுதி எம்.பியுமான திரு. எம். சிவசிதம்பரம் திருகோணமலையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திருகோணமலை பா. உ. திரு இரா சம்பந்தன் தலைமையில் பெரியமுற்ற வெளிமைதானத்தில் கடந்த சனிக்கிழமை பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

திரு சம்பந்தன் எம். பி. தனது தலைமையுரையில் கூறியதாவது:

திருமலை மண்ணில் அநீதி இல்லை என்பதை இந்த அரசுக்கு எடுத்துக் கூறியுள்ளேன். ஆனால் மதிகெட்டு யாராவது செயல்பட்டால் அவரை திருமலை மண் விழுங்கிவிடும் என்றார்.

தலைவர்கள் எமது இலட்சியத்திலிருந்து விலகவில்லை. சுவரொட்டிகளைக் கண்டு நாம் பயந்தவர்கள் அல்ல, கருத்து வேறுபாடுகள் இருந்தால் தீர்த்துக் கொள்ளலாம், ஆனால் தயவாக ஒன்றை மட்டும் கேட்க விரும்புகின்றேன். இளைஞர்களே எம் இனத்தையும், மக்களையும் கூறுபோடுவதற்கு முயற்சி எடுக்காதீர்கள் என்றார்.

திரு சிவசிதம்பரம் தமது உரையில் கூறியதாவது:

எமது இனத்துக்கு பெருமை தரக்கூடியவகையில் நாலரை மாதங்கள் குட்டிமணி,ஜெகன் சார்பில் நீதிமன்றத்தில் வாதாடினோம். ஆனால் தீர்ப்பைக் கண்டு சோர்ந்து நாம் மீண்டும் உற்சாகத்துடன் தீர்ப்பை எதிர்த்து வாதிட துணிந்துள்ளோம்,

நாம் சுபீட்சமாக வாழவேண்டும் என்ற நோக்குடன் எமது தலைவர்கள் ஒற்றுமைப்பட்டு கூட்டணியை ஆக்கி தனி நாடு அமைக்க முடிவுசெய்தோம் இந்த முடிவில் எந்த விதமாற்றமும் இல்லை.

ஜனாதிபதி தேர்தலில் கூட்டணிக்கு அக்கறையில்லை. எமது மண்காக்கவேண்டியது தான் முதல்கடமை

இதனை பரீட்சித்துப் பார்க்கவே நாம் மாவட்ட அபிவிருத்திச்சபையை ஏற்றோம்,

யாழ். நூல் நிலையம் எரிக்கப்பட்டு நாசவேலை செய்யப்பட்டபோதும், மலையக மக்கள் தாக்குண்டபோதும் வெளிநாட்டு அரசுகள் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டத் தொடங்கிய பின்பு மாவட்ட அபிவிருத்திச் சபை அதிகாரங்கள் பற்றி ஜனாதிபதி எம்மை பேச்சு வார்த்தைக்கு அழைத்தார்.

யாழ் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் இங்குபேசுகையில்:-

சுதந்திரப் போரில் ஒரு காலகட்டத்தில் உயிர் உடமை இழக்க வேண்டும். இந்த நிலையில் எமது பலத்துக்கு ஏற்ற ஒரு போராட்டத்தினை நாம் நடத்த வேண்டும். பயனை உணர்ந்து போராட்டத்தில் இறங்க வேண்டும் எமது இளைஞர்களையும், இயக்கத்தையும் பலப்படுத்தினால் விடுதலை பெறமுடியும். எதற்கும் இயக்கம் பலப்படுத்தப் படவேண்டும். தமிழகத்திலிருந்து எமக்காக ஆதரவு பொங்கிவருகின்றது. எமது பிரச்னையை உலக நாடுகள் நன்கு உன்னிப்பாக அறிந்து வருகின்றன.

பிரதேச வேறுபாடுகளை மறந்து அனைவரும் தமிழ்ஈழ பிரசைகள் என்ற எண்ணம் உருவாக்கவேண்டும்'' என்றார்.

பருத்தித்துறை எம். பி, திரு, க. துரைரத்தினம் பேசுகையில் தமிழ் மக்கள் ஏகோபித்த எக் கஷ்டம் வந்தாலும் ஒன்றாக நிற்க வேண்டும் என்றார்.

பட்டிருப்பு எம். பி. திரு. பூ. கணேசலிங்கம் பேசுகையில்:-

தலைவர்கள் எப்போது களத்தில் குதிக்க சொல்கின்றார்களோ அப்போது நாம் களத்தில் இறங்கத் தயாராகவுள்ளோம். கருத்துவேறுபாடுகள் இருக்கலாம், ஆனால் இதனைப் பொதுசபைக்கு வந்து கூறுங்கள் ஒற்றுமையை சிதைக்க முயலாதீர்கள் என்றார்.

உடுப்பிட்டி எம், பி. திரு. கே இராசலிங்கம் தனதுரையில்:-

35 இலட்சம் தமிழ்பேசும் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டத்தில் நெருக்கடியான சூழ்நிலையில் இந்த சந்திப்பு இடம் பெறுகிறது. இன்று சுதந்திரக் கட்சி சின்னாபின்னமாக்கப்பட்டது போனது எமது ஒற்றுமையை குலைப்பதற்கு ஒரு சிலர் தாண்டவம் ஆடுவதை நாம் காணக்கூடியதாயுள்ளது

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சூழ்ச்சி மூலம் எமது ஒற்றுமையைக் கலைக்க முயற்சி எடுக்கப்படுகிறது. எமது இலட்சியத்தையும் ஒற்றுமையையும் சிதறடிக்க முடியுமானால் கட்டுக்கோப்பாக இயங்கி வந்த கூட்டணியின் நிலை என்ன?

சமூக பிரதேச வேறுபாடு இன்றி ஒற்றுமை பட்டு கூட்டணி ஆரம்பிக்கப்பட்டது.

தலைமைக்கு கீழ் கட்டுக்கோப்பாக நடந்து விடுதலைக்கு உதவுங்கள். தலைவர்களுக்கு பக்க பலமாகயிருந்து மனச் சோர்வடையாது செயல்படுங்கள் என்றார்.

கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம், மன்னார் எம். பி. திரு. சூசைதாசன், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. எஸ். சம்பந்தமூர்த்தி, அம்பாறை மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு வேல்முருகு, யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு நடராசா ஆகியோரும் உரையாற்றினர்.

---

## ''பொது ஸ்தாபனங்கள் நாட்டுவளர்ச்சியில் தீவிர அக்கறை காட்டவேண்டும்''

(நெடுந்தீவு

நாட்டின்வளர்ச்சியில் பொது ஸ்தாபனங்கள் தீவிர அக்கறை காட்டவேண்டும். சங்கங்கள் ஒழுங்காக இயங்கவேண்டும். தலைமைப்பதவிக்காக மட்டும் சங்கங்களில் சேர்ந்துகொண்டு பதவிக்குரிய தொண்டுகளையும் சேவைகளையும் நாட்டுக்கு வழங்க முன்வராதவர்கள் பதவிகளில் இருந்து ஒதுங்கி உண்மையான சேவைமனப்பாங்கும் செயல்திறமும் கொண்டவர்களுக்கு வழிவிட்டுக்கொடுப்பதன் மூலமாவது சிறிய பயனை நாட்டுக்கு வழங்க வேண்டும். தேசிய இளைஞர் சேவை மன்றத்தைச் சேர்ந்த இளைஞர்களும், யுவதிகளும் முத்தமிழ் இளைஞர் ஒன்றியத்தைத் தொடக்கிவைத்திருப்பதுடன் நின்றுவிடாது கூடிய சிரமதானமுயற்சிகளில்தம்மை ஈடுபடுத்தி இக்கிராமத்தின் வளர்ச்சிக்கு உதவியளிக்க வேண்டும்.

இவ்வாறு நெடுந்தீவு முத்தமிழ் இளைஞர் ஒன்றியத்தைத் தொடக்கிவைத்துப் பேசிய நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு ஆ. மகாலிங்கம் கேட்டுக்கொண்டார்

திரு. ஐ. கோவிந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் திரு. சி. வ. சங்கரப்பிள்ளை பேசும்போது கிராமங்களின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாக இருக்கும் இளைஞர்கள் சுயநலம் என்ற சக்திக்குள் சிக்கிக்கொள்ளாதவாறு முதலில் தம்மைத்தாம் பாதுகாத்துக் கொள்ளவேண்டுமென்றும், இளைஞர்களது சிந்தனை எப்போதும் பொது நோக்கைக் கொண்டதாகவும் நாட்டின் எழுச்சிக்கானதாகவும் அமையவேண்டும் என்றும் கூறினர். (க)

---

## தமிழின் மேற் காதல் கொண்டோன்

தேனாகி அமுதாகிச் செகத்தினிலே
இனிக்கின்ற பொருள்கள் எல்லாம்
தானாகி விளங்குகின்ற தண்டமிழின்
அழகினிலே காதல் கொண்டோன்
நானாடும் உலகனைத்தும் தமிழ்பரப்பத்
தூதுசென்ற நல்லோன் தன்னை
மேனாடும் பன்னாடும் ஒருங்கிணைந்து
போற்றிடுதல் வியப்போ சொல்வீர்.

''இளங்கோ''

(இன்று தனிநாயகம் அடிகளாரின் 2வது நினைவு தினம்

---

## விற்பனையும் பொருட் காட்சியும்

(மன்னார்]

சிறுகைத்தொழில் திணைக்களத்தினால் உற்பத்திசெய்யப்பட்ட பொருட்களின் பொருட்காட்சியும் விற்பனையும் செப்ரெம்பர் மாதம் நடுப்பகுதியில் நடைபெறும்.

மன்னார் பொதுசேவை ஊழியர்களரியில் நடைபெறும் இப் பொருட்காட்சியிலும் விற்பனையிலும் அரசாங்க ஊழியர்கள் 500 ரூபா பெறுமதியான பொருட்களை கடன் அடிப்படையில் வாங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன,

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை:

# மீண்டும்வேலை வழங்கப்பட்ட தொழிலாளர் மீது கடுமையான நிபந்தனை!

(மாவிட்ட புரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் அண்மையில் வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களில் ஒருபகுதியினருக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ள போதிலும்அவர்களுக்குகடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் மத்தியில் விரக்தி நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் வேலை வங்கி மூலம் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட தொழிலாளர்களில் சுமார் 150 பேர் கடந்த மாதம் 13ம் திகதி திடீர் வேலைநீக்கம் செய்யப்பட்டதும் இதுகுறித்து அவர்கள் எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கத்திடம் முறையிட்டதும் அவர் இதனை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்ததும் தெரிந்ததே.

இதையடுத்து இவர்களுக்கு மீண்டும் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு சுமார் 50 பேருக்கு மீண்டும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது ஏனையோருக்கும் படிப்படியாக நியமனம் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.


இவர்களுக்கு நியமனம் வழங்கப்படுகின்றபோதிலும் இவர்களுக்கு விதிக்கப்படும் நிபந்தனைகள் மிகவும் கடுமையாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆறுமாதஒப்பந்தஅடிப்படையிலேயே இவர்களைச் சேர்த்துக் கொள்வதாகவும் இந்நியமனம் மூலம் தற்காலிக நிரந்தர நியமனம் எதையும் எதிர்பார்க்க முடியாதெனவும் எவ்வித காரணமுமின்றி 24 மணி நேரத்தில் வேலையிலிருந்து நிறுத்தும் உரிமை கூட்டுத்தாபனத்திற் குண்டென்றும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர்களால் மதுறு ஓயா சிரமதானப்பணிக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு பெரிதும் கஷ்டப்பட்டு சிரமதானம் செய்து அதன் பயனாக வழங்கப்பட்ட இந்த சிமெந்துத் தொழிற்சாலை வேலை நிரந்தர அடிப்படையிலேயே அமையும் என்று எதிர்பார்த்திருந்த தொழிலாளர்கள் பெரிதும் விரக்தியடைகின்றனர்.

தமக்கு நிரந்தர நியமனம் கிடைக்க வழி வகுக்குமாறு எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கத்திடமும் இவர்கள் கோரிக்கை விடுக்க உள்ளனர்.

இத் தொழிலாளர்களுக்கு கடும் நிபந்தனைகள் விதிக்கப்படும் அதே சமயத்தில் சிங்கள சகோதரர்கள் பலர் நிபந்தனை எதுவுமின்றி நிரந்தர நியமனம் பெற்று வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.



வசதிகுறைந்த பிள்ளைகள் வெளி உலகை அறிவதற்கும், வேலை வாய்ப்புகள்பற்றி தெரிந்து கொள்வதற்கும் 'வசதி குறைந்த பிள்ளைகளின் செயல் முறை'த் திட்டத்தின் கீழ் யாழ். ரோட்டரி கழகத்தினர் திருநெல்வேலி சனசமூக நிலையப் பிள்ளைகளை விவசாய கைத்தொழில் பகுதிகளுக்கு சுற்றுலா அழைத்துச் சென்று உருக்கு, அலுமினிய, பட்டு, கிளாஸ், சவர்க்கார, ஏற்றுமதி பொருள் தொழிற்சாலைகளை காண்பித்தனர். ரோட்டேரியன் தியாகராசா சுற்றுலாவுக்கான வாகனத்தை வழங்கி, 'வீடியோ' படமும் காண்பித்தார். ரோட்டேரியன் குகதாசன் பிள்ளைகளுக்கு நண்பகல் போசன விருந்தளித்தார்.

## வடஇலங்கை சங்கீதசபை பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை சங்கீதசபை நடாத்திய 82-ம் ஆண்டு சங்கீதப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பெறுபேறுகள் தொடர்ந்து 'ஈழ நாடு' இதழில் வெளிவரும் சங்கீதம் முதலாம், இரண்டாம் பகுதி முடிவுகள் இங்கு தரப்படுகின்றன.

### சாதாரணசித்தி

நாகேஸ்வரி மகாதேவசர்மா மே பா) வயலின், விஜயதேவி குமாரசாமி வயலின், சுகன்யா முத்துக்குமாரசாமி வயலின், அந்தோனிப்பிள்ளை வைற்றுன் திலகராம் வயலின், f வசந்தி சத்தியநாதன் வயலின், சுசிலாதேவி சபாநாதன் [மே. பா] வயலின், துஷித்தா மஹிந்திரன் பாட்டு, சுபத்திரிக்கா சிவநாயகம் பாட்டு, அனுஷகுமாரி மார்க்கண்டு பாட்டு, கீதாஞ்சலி கணேஸ்வரன் பாட்டு, செல்வராஸி துரைசிங்கம் பாட்டு, ஈஸ்வரி நாகலிங்கம் பாட்டு, விஜயகுமாரி மாணிக்கம் பாட்டு, ஜிமித்திரா நவரட்ணம் பாட்டு, நந்தினி றெபெக்கா சற்குணம் வயலின்.

### கொக்குவில் முதலாம்பிரிவு

0 ஜெகதம்பா செல்வத்துரை வீணை, 0 சண்முகநாதன் உருத்திரநாதன் வீணை, 0 செந்தில் புஸ்பா பாலசுப்பிரமணியம் பாட்டு, f 0 சிதம்பரநாதன் கிருபரஸ்கிரிநாதன் பாட்டு, f 0 மீரா பாலகிட்ணர் வயலின், f யோகநாதன் சிவசங்கர் புல்லாங்குழல், புஸ்பவதி சின்னராசா பாட்டு, 0 கலாமதி சிவானந்தன் வீணை, f வத்ஸலா சிவானந்தன் பாட்டு, f வதனி குருமூர்த்தி வீணை, f 0 நிருபா பரமதாசன் வீணை.

### இரண்டாம் பிரிவு

சசிகலா இராசரத்தினம் பாட்டு, மகாதேவ குருக்கள் சோமசுந்தரசர்மா பாட்டு, சாந்தினி ஜெகநாதராஜா பாட்டு, 0 செல்வமலர் பிச்சைமணி பாட்டு, விஜயமாலா சின்னத்துரை வயலின், f மைதிலி இரத்தினராசா வயலின், மகாராணி நவரத்தினம் பாட்டு, சுகந்தி தம்பிராசா வயலின், A 0 நிரஞ்சனி ஞானசுந்தரம் பாட்டு. பாட்டு.

### சாதாரணசித்தி

தயாளினி கந்தசாமி பாட்டு' ஜெயரூபலீலா நவரட்ணம் [மே, பா] பாட்டு, ஜனனி ஏகாம்பரநாதன் பாட்டு.

### ஊர்காவற்றுறை முதலாம்பிரிவு

0 றூபினி விஜயரெட்ணம் பாட்டு, 0 சுலோசனா ஏழுமலை பாட்டு, சுதர்சினி வேதாரணியம்பிள்ளை பாட்டு, f வல்லிபுரம் சுந்தரராஜன் பாட்டு, f 0 கந்தசாமி ஜெயமாறன் பாட்டு, 0 ஜெயபாரதி கந்தசாமி பாட்டு, 0 ஜெயசௌரி கோபாலகிருஷ்ணன் 0 சசிகலை சதாசிவம் பாட்டு, 0 சர்வமலர் சோமசுந்தரம் பாட்டு, f 0 தயாளினி சண்முகநாதன் பாட்டு, 0 சுகன்யா பாலசுந்தரம் பாட்டு, 0 பரமேஸ்வரி பேரம்பலம் பாட்டு, f விமலாம்பிகை நடராசா பாட்டு, f ஈஸ்வரி நடராசா பாட்டு, f 0 கலாநிதி பொன்னம்பலம் பாட்டு, 0 சிவலோகநாயகி பரபசாமி பாட்டு, 0 நீலாம்பிகை விக்கினேஸ்வரன் பாட்டு, f 0 கெஜதாம்பிகை விக்கினேஸ்வரன பாட்டு, f 0 மனோகரி பரஞ்சோதி பாட்டு.

### இரண்டாம்பிரிவு

அன்னமலர் கோகிலாம்பிள்ளை [மே பா] வயலின், ஜெயந்தி கந்தசாமி பாட்டு. சசிகலா சுப்பையா வயலின், இந்திரகலா நடராஜா பாட்டு, வல்லிபுரம் பகீரதன் பாட்டு, பவானி தில்லை நடராஜா பாட்டு, 0 தயாளினி தியாகராசா பாட்டு. வானதி செல்வரத்தினம் பாட்டு, மரினா அரியரத்தினம் பாட்டு, 0 சர்வாம்பிகை தில்லையம்பலம் பாட்டு, யசோதா சதாசிவம் பாட்டு, நந்தினி கந்தசாமி பாட்டு. (7 ம் பக்கம் பார்க்க)

## சனச சமூக நிலைய நூலகம்

(யாழ்ப்பாணம்)

மீசாலை வடக்கு சனசமூக நிலையநூலகத்தை சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் திறந்து வைத்தார். அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. முத்துக்குமாரசாமி, திரு. எஸ். நவரத்தினம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைத்தனர்இராமாவில்கி. மு. ச. தலைவர் திரு, இ. சரவணமுத்து, திரு. சதாநடராசா, திரு. க. மயில்வாகனம், கிராமசேவை அலுவலர் திரு. க. சின்னையா, திரு. இ. வேலுப்பிள்ளை ஆகியோரும் உரையாற்றினார்கள். [க]

## விமர்சன அரங்கு

[யாழ்ப்பாணம்)

இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் எழுதி அலை வெளியீடாக வெளிவந்திருக்கும் 'ஒரு கோடை விடுமுறை' என்ற நாவல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இளவாலையில் விமர்சிக்கப்பட உள்ளது. புனித என்றியரசர் கல்லூரி மண்டபத்தில் நடக்கும் விமர்சனக்கூட்டத்தில் இந்நாவலை யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணிய ஐயரும் திரு. உ. சேரனும் விமர்சிக்கின்றனர்.

## இன்று ஆண்டு விழா

[நெடுந்தீவு]

நெடுந்தீவு குருநகர் சென் அன்ரனிஸ் பாலர் பாடசாலையின் 10 வது ஆண்டு நிறைவு விழா இன்று கொண்டாப்படுகின்றது. நெடுந்தீவு நிலாஜோதி நாடகமன்றத்தின் ஆதரவில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக நெடுந்தீவு பிரதேசசபைத்தலைவர் திரு. சி. வ, சங்கரப்பிள்ளை, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம், கிழக்கு கிறமோதய சபைத்தலைவர் திரு. நா. இராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். விசேஷ போட்டி நிகழ்ச்சிகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும் இவ்விழா நில ஜோதி நாடக மன்றத்தலைவர் திரு. ரூ க. மதியாபரணம் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ)

## நயினை நிர்வாக உத்தியோகஸ்தர்

(நயினாதீவு)

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவின் பணிப்பின் பெயரில் யாழ். அபிவிருத்திச் சபை நயினாதீவு உப அலுவலகத்தின் நிர்வாக உத்தியோகத்தராக திரு. எஸ். பி. தில்லைநாதன் நியமனம் பெற்றுள்ளார்.

## தகப்பன் பணம்தரவில்லை; மகன் நஞ்சருந்தினார்

(சாவகச்சேரி)

தகப்பனார் காசு கொடாது போகவே கிருமிநாசினி அருந்தினாராம். மகன் ஒருவர் சம்பவதினம் பளையைச் சேர்ந்த சுப்பிரமணியம் அருணகிரிநாதன் என்பவர் தனது தகப்பனாரை 500 ரூபாய் கேட்டதாகவும், அவர் கொடுக்காததால் கிருமிநாசினி அருந்தியதாகவும் கூறப்படுகிறது.

சாவகச்சேரி திடீர் மரண விசாரணையதிகாரி திரு. என். தர்மேந்திரன் மரண விசாரணையை மேற்கொண்டார். சாவகச்சேரிப் பொலிஸ் உத்தியோகத்தர் எஸ். சூரியப்பிரகாசம், சாட்சிகளாக வி.கைலைநாதன், வி. குமார், காலமானவரின் தகப்பன் த.சுப்பிரமணியம் ஆகியோரை ஆஜர்செய்தார்.

சாட்சியங்களிலிருந்து காலமானவர் குடியிலும், சூதிலும் நாட்டமுள்ளவர் என்பதும் தனது புத்தம் புதிய சைக்கிளைக்கூட, விற்று அப்பணத்தைச்சூதிலும், மதுவிலும் செலவளித்தார் என்றும் தகப்பனாரிடம் 500 ரூபா காசுக் கேட்க அவர் கொடுக்க மறுத்ததால் கிருமிநாசினி அருந்தினார் என்றும் இதற்கு 2 வருடங்களுக்கு முன்பும் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்யமுயன்று தப்பியவர்என்றும் தெரியவந்தது,

சாட்சியங்களைப் பதிவு செய்த மரணவிசாரணையதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## நெடுந்தீவு படகு சேவைபற்றி புகார்

(நெடுந்தீவு)

"இறுக்கமாக இருக்கவேண்டிய நல்லுறவுகளில் விரிசல்கள் ஏற்பட இடமளிக்கக் கூடாது. நெடுந்தீவு மக்கள் தமது சொந்தப் பாவனைக்காக எடுத்துச் செல்லப்படும் சில பாவனைப் பொருட்களை அரசாங்கப் படகுகளில் ஏற்ற அனுமதி மறுக்கப்படுகின்றது. என்று நெடுந்தீவு முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. என். இலட்சுமணராசா தெரிவித்தார். அரசாங்கப் படகுகளில், கருவாடு. ஆடு என்பன எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது ஒரு பிரயாணி சுமார் ஒரு றாத்தல் நிறையுள்ள கருவாட்டைத் தன்னுடன் எடுத்துச் செல்லமுடியாதநிலை இருக்கிறது. இதற்காக ஒருபடகை நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்கு வாடகைக்கு அமர்த்த முடியுமா என்றும் அவர் வினா எழுப்பியுள்ளார். இது குறித்து வட பிரதேச இயந்திரப் பொறியியலாளர் திரு. என். நித்தியானந்தத்துடன் தொடர்பு கொண்டுள்ள மேற்படி கழகத் தலைவர், வர்த்தக ரீதியிலான ஏற்றுமதிகள் மட்டுமே தடைசெய்யப்பட வேண்டுமெனவும் சொந்தப் பாவனைக்காகக் கொண்டு செல்லப்படும் சிறிய அளவிலான பொருட்கள் தடைசெய்யப்படுப்பட்சத்தில் குறிப்பிட்ட சேவை பயணிகளுக்கு அவசியமானது எனக் கருதமுடியாது எனவும் இப் பிரச்சினைகளால் படகுகளும் உரிய நேரத்தில் புறப்படமுடியாதிருப்பதாகவும் சிறிய அளவிலான பாவனைப் பொருட்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கும் உத்தரவுகளை படகு ஊழியர்களுக்குத் துரிதமாக அனுப்பிவைத்துதவுமாறு அவர் திரு. நித்தியானந்தனைக் கேட்டுள்ளார்.

## மாட்டுவண்டி சவாரி!

(நீர்வேலி)

நீர்வேலி விவசாயிகள் நடாத்தும் "விவசாயிகள் தினவிழாவையொட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி முற்றவெளி மைதானத்தில் மாட்டுவண்டிச் சவாரி நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை நீர்வேலி க்ரமநலசேவை நிலைய உத்தியோகஸ்தர் திரு. இ. தவராசா மேற்கொண்டு வருகிறார். (கி)

சணல்

## தொழிற் சாலைகள் தேசியமயமாக்கப்படும்!

புதுடில்லி ஆக. 31

மேற்கு வங்காள அரசு சணல் தொழிற்சாலைகளைத் தேசிய மயமாக்கவிருக்கிறது.

தனியார் துறையிடம்உள்ள தொழிற்சாலைகள் தி ப்திகரமாக இயங்கவில்லையென முதலமைச்சர் தெரிவித்துள்ளார். [க]

## கல்விநிலையம் மூடப்பட்டது

சென்னை, ஆக. 31

சென்னையிலுள்ள கல்விநிலையம் ஒன்று மாணவர் அமைதியின்மையால் காலவரையின்றி மூடப்பட்டது.

இக்கல்விநிலையத்தைச் சேர்ந்த 6 புதிய மாணவர் நீக்கப்பட்டிருந்தனர். (அ)வர்களை மீண்டும் சேர்க்கவேண்டும் என்று கூறி மாணவர் கல்லூரி வாசலில் மறியல் செய்தனர். இதனல் ஆசிரியர்களும் ஊழியரும் கல்லூரிக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டதால் கல்லூரி மூடப்பட்டது. (க)

சேலம் நகரை

## அழகுபடுத்தக் கமிட்டி

சென்னை ஆக. 31

சேலம் நகரத்தை அழகாக வைத்திருப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு வரதராஜன் 4 கமிட்டிகளை நியமித்துள்ளார்.


**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி: 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்
உல்லாசப்பறவைகள்

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு – சுபாஷினி
நெஞ்சத்தை கிள்ளாதே
(கலர்)

118 வது வெற்றித் திருநாளாக
**மனோகரா** (யாழ்ப்பாணம்) கடைசி வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
கார்த்திக் - ராதா - தியாகராஜன்
**அலைகள் ஓய்வதில்லை** (கலர்)

**றீகல்** Daily 5 Shows
[யாழ்.நகர்]
**Moving Violation**

**சாந்தி** [யாழ்.நகர்]
தினசரி 5 காட்சிகள்
BILLION DOLLAR THREAT
(Action packed)

**வெலிங்டன்**
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம்வாசல் இதயம்

**லிடோ** தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
பிரமிளா
அரங்கேற்றம்

**ராணி** (யாழ் நகர்) 9வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
**விஸ்வரூபம்**
[ஈஸ்ட்மன் கலர்]

**ஸ்ரீதர்** (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
**நேற்று இன்று நாளை**

**ராஜா** (யாழ். நகர்)
இன்று மட்டும் தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்—ஜெய்சித்ரா—தேங்காய்சீனிவாசன்
**உங்கள் விருப்பம்**

3-9-82 முதல் பிரதாப்-ராதிகா
**வசந்தத்தில் ஒரு வானவில்**

**வின்ஸர்** தினசரி 4 காட்சிகள்
(யாழ் நகர்)
3-வது வெற்றி வாரம்
ஒவ்வொருவரின் வாழ்க்கையில் நிகழும் போராட்டங்கள். இவைகளின் மத்தியில் நேர்மையும் துணிவும் கொண்ட சேகர். வேலைக்காக அலையும் செந்தில். குடும்பச் சுமையில் கலங்கித் தவிக்கும் வாசு. சினிமா உலகிலே நடிகனாக பிரகாசிக்க துடிக்கும் சிவா.
தந்தையின் அன்புக்கும் பாசத்திற்கும் ஏங்கித் தவிக்கும் குமார்.
இவர்களின் வாழ்க்கை கடும் வரட்சியை கொண்ட பாலைவனம் தானா? என்பதை காணத் தவறாதீர்கள்.
**பாலைவனச்சோலை**
(கலர்)


# வேலையில்லா திண்டாட்டத்தை தீர்க்க இளைஞர்களுக்கு தொழில் பயிற்சி

[அரியாலை]

தேசிய இளைஞர் சேவை மன்றம் இளைஞரிடையே ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்துவதுடன் இளைஞர்கள் மத்தியில் இருக்கும் வேலையில்லாத்திண்டாட்டத்தை நீக்குமுகமாக அவர்களுக்குத் தேசிய ரீதியில் தொழிற் பயிற்சியும் அளித்து வருகிறது. இத்தொழிற் பயிற்சியின் மூலம் இளைஞர்களும், யுவதிகளும் நாளாந்தம் நல்ல வருமானத்தைப் பெற்று வருகின்றனர்.

இவ்வாறு தேசிய இளைஞர் சேவை மன்ற நல்லூர்த் தொகுதி அமைப்பாளர் திரு. க. முருகையா அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற அரியாலை மேற்கு காந்தி இளைஞர் கழக அங்குரார் பணக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. முருகையா தொடர்ந்து பேசுகையில், இளைஞர்களிடையே கல்வி, கலை, கலாச்சாரம், விளையாட்டு என்பவற்றை வளர்க்கவும், இவற்றிற்குப் புத்துயிர் அளிக்கவும் தேசிய இளைஞர் சேவை மன்றம் தேசிய ரீதியில் உதவிவருகிறது. இந்த இயக்கத்தில் இணைந்துசெயல்படும் இளைஞர்களும், யுவதிகளும் தேசிய நோக்குடனும் சேவைமனப்பான்மையுடனும் செயல்பட வேண்டும். இக்கிராமத்தை அண்டியுள்ள வீதிகள், ஒழுங்கைகள், குளங்கள் என்பவற்றை சிரமதானம் மூலம் சீர்செய்யும் வேலைகளையும் இக்கழகங்கள் மேற்கொள்ளமுடியும். இச்சிரமதானப்பணியில் ஈடுபடுவோருக்கு நாளாந்தம் அவர்களது சரீர உழைப்புக்கு வேதனமும் இந்த மன்றம் வழங்குமென்று குறிப்பிட்டார். (க)

பத்தேகம

## முன்னாள் எம். பி. காலமானார்

(கொழும்பு)

பத்தேகம முன்னாள் எம் பி. யும், முன்னாள் அமைச்சருமான திரு ஹென்றி அபயவிக்கிரமா தமது 77வது வயதில் நேற்றுக் காலமானார்.

1952ல் பத்தேகம எம். பி. யாகத் தெரிவுசெய்யப்பட்ட இவர் 1956ல் பொதுமராமத்து அமைச்சரானார். பத்தேகம கிராமசபைத் தலைவராக 30 ஆண்டுகள் இவர் கடமையாற்றியுள்ளார். (க)

## மீனாட்சி அம்மன் வருட உற்சவம்

(மாவிட்டபுரம்)

ஊரெழு ஸ்ரீ மீனாட்சி அம்மன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் சிறப்புற நடைபெற்றுவருகிறது. செப்டம்பர் 4ம் திகதி இரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

× × ×

[பண்டத்தரிப்பு]

வடலியடைப்பு புதருனை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் சிறப்பாக நடைபெற்றுவருகிறது. நாளை தேர்உற்சவமும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெற உள்ளது.

## வடஇலங்கை

[6ம் பக்கத் தொடர்ச்சி]

**சாதாரணசித்தி**

ரனிதா சிவபாதம் பாட்டு

**கோப்பாய்**

**முதலாம்பிரிவு**

0 சுமதி வேலாயுதம்பிள்ளை பாட்டு, 0 உஷாநந்தினி நடராஜபிள்ளை பாட்டு, 0 உதயமணி இரத்தினசாமி பாட்டு, 0 அழகேஸ்வரிகந்தையாபாட்டு 0 அருட்செல்வி அருட்பிரகாசம் பாட்டு, f 0 அமிர்தலிங்கம் சந்திரலிங்கம் பாட்டு, f 0 சுமங்கலா ஸ்ரீ ஸ்கந்தராசா பாட்டு, சுபத்திரா சிறிதரன் பாட்டு, 0 சீதாதேவி பொன்னம்பலம் வயலின், B 0 உமையாள் பாலசுப்பிரமணியம் பாட்டு.

**இரண்டாம்பிரிவு பாட்டு**

f சுபாஜினி சிவபாதம், 0 விஜிதா சிவசுப்பிரமணியம், கவிதா லோகநாயகம், 0 சித்திரா பேராயிரஉடையார், 0 லோகரூபி தளையசிங்கம், 0 சுகந்தினி இராசரத்தினம், 0 சுரேஷ்குமார் திருச்செல்வம், 0 தமயந்தி செல்வநாயகம், தரணிகா பாலசுந்தரம் வீணை, A ஜெனனி ஜெயராசசிங்கம் பாட்டு.

**சாதாரண சித்தி பாட்டு**

ரூபவேணி பொன்னம்பலம், சுபகினி ஜெயரத்தினம், நந்தகுமாரி ரஞ்சோதி, விஜேதினி கந்தையா, மீரா தம்பிஐயா, ஜெகதாம்பிகை தம்பித்துரை, ஜெயரஜினி பாலகிருஷ்ணன், சுபாஜினி சற்குணம், விஜயா செல்வநாயகம், ஜெயவதனி தில்லையம்பலம், வித்தகம் குமாரசாமி.

சமூக முன்னேற்ற

## கழகங்களின் சமாசத்தின் வருடாந்த மகாநாடு!

[அரியாலை]

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் வருடாந்த மகாநாடு இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

சமாசத்தலைவர் திரு. இ. முநாகலிங்கம் தலைமையில் காலை நடைபெறும் பொதுமகாநாட்டில் முதன்மை விருந்தினராக எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கமும், அவரது பாரியார் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கமும், கலந்துகொள்ளுகிறார்கள். சிறப்பு விருந்தினர்களாக வடபிரதேச பாராளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் மு. சிவசிதம்பரம், வி. தர்மலிங்கம், வெ. யோகேஸ்வரன், வ. ந. நவரத்தினம், த. இராசலிங்கம், மு. ஆலாலசுந்தரம், கே. துரைரத்தினம், கா. பொ. இரத்தினம், வீ. ஆனந்தசங்கரி, சே. மா. செல்லத்தம்பு, ஆகியோர்களும் யாழ்.மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. எஸ். நடராசாவும் கலந்துகொள்ளுகிறார்கள்.

மாலை 3 மணிக்கு திரு எஸ். பத்மநாதன் தலைமையில் நடைபெறும் கலை அரங்கில் பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபரும் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைச் செயலாளருமான திரு. தேவநேசன் நேசையாவும், சிறப்பு விருந்தினர்களாக வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளையும், யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை உபதலைவர் திரு. எஸ். நாகராசாவும், யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு எஸ் இரத்தினசிங்கமும் கலந்துகொள்ளுகிறார்கள். (க)

## 'கருணாகரன் நான்மணிமாலை' இன்று வெளியீடு

[உரும்பராய்]

ஆசிரியர் செ ஐயாத்துரை எழுதிய உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் நான்மணிமாலை என்னும் நூல் வெளியீட்டு விழா இன்று புதன் மாலை ஆலய மண்டபத்தில் நிகழவிருக்கிறது.

இளைப்பாறிய அரசாங்கஅதிபர் திரு செ. சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பண்டிதர் சே. சிவப்பிரகாசம், பண்டிதர் வித்துவான் இ திருநாவுக்கரசு ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.

முதற்பிரதியை திரு. வெ சண்முகநாதன்பெற்றுக்கொள்வார். (அ)

## அங்கத்தவர்கட்குக் கடனுதவி

(கரவெட்டி)

கட்டைவேலி – உடுப்பிட்டி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம், 88 அங்கத்தவர்களுக்கு 45 ஆயிரம் ரூபாவைக் கடனாக வழங்கி உள்ளது.

தென்னங்கள்ளின் உற்பத்தியை அதிகரிக்கும் முகமாகச் சீவல் தொழிலாளர்கள் 88 அங்கத்தவர்களுக்கும் இக்கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

சீவல் தொழிலாளர்களுக்குக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதால் முந்திய வருடங்களைவிட இவ்வருடம் தென்னங்கள்ளின் உற்பத்தி அதிகரிக்குமென சங்கத்தின்பொது முகாமையாளர் திரு. பொ. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

## சுவரொட்டி மயம்

(பண்டத்தரிப்பு)

ஆங்கிலத்திலும், தமிழிலுமான சுவரொட்டிகள் பல பண்டத்தரிப்புச் சந்தியிலும், சித்தன்கேணிச் சந்தியிலும் ஒட்டப்பட்டுள்ளன.

## சமாதான நீதவான்



யாழ். மாவட்ட சமாதான நீதவானாக நல்லூர் அரசடியைச் சேர்ந்த திரு. கந்தையா செல்வராசா நீதியமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் வடபிராந்திய போக்குவரத்துச்சபையில் பொறியியல் பகுதி ஊழியராகவும், யாழ். மாநகராட்சி மன்றத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தராகவும் முன்பு கடமையாற்றியவர்.

சமூகத் தொண்டில் ஈடுபாடுள்ள திரு. செல்வராசா, பொலிஸ் பொதுமக்கள் நட்புறவுச் சங்க உறுப்பினராகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நல்லூர்தொகுதிக் கிளை உறுப்பினராகவும் இருக்கிறார். அரசடி ஜனசக்தி சனசமூக நிலைய வளர்ச்சிக்கு உழைத்தவர்களில் இவரும் ஒருவராவார்.

இன்று புதன்கிழமை காலை யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு டி எம். ஜேசுரட்ணம் முன்னிலையில் இவர் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளார். (மா)

# இந்திய முன்னாள் உபஜனாதிபதி பாட்டக் காலமானார்

புதுடில்லி, ஆக. 31

பாரத முன்னாள் உப ஜனாதிபதி டாக்டர் கோபால பாட்டக் தமது 81 வயதில் இன்று புதுடில்லியில் காலமானார்.

இம்மாதம் 24ம் திகதி மூச்சுவிடுவதில் சிரமமேற்பட்டதைத்தொடர்ந்து இவர் புதுடில்லியில் உள்ள அகில பாரத வைத்திய கழகத்தில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

23வயதில் வழக்கறிஞராக தமது வாழ்வை ஆரம்பித்தவர் பாட்டக்.

மத்திய சுகாதார மந்திரி திரு. சங்கரானந் முதலில் சென்று அஞ்சலி செலுத்தினார் இந்திய ஜனாதிபதி திரு. செயில்சிங் அனுதாபம் தெரிவித்துள்ளார்.

''நற்குணமும் கருணையுமிக்கவராக வாழ்ந்தவர் பாட்டக் அவர் பல துறைகளில் பணியாற்றியவர்'' என்று பிரதமர் திருமதி இந்திரா காந்தி தமது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். [க]

## இன்றைய இசை நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் ஆ[illegible]ப்பந்தி உயர் கலைக்கல்லூரி இசைப்பகுதியினர் நடத்தும் 3வது ஆண்டு பத்துநாள் இசை விழாவின் 6வது தினமாகிய இன்று புதன்கிழமை நிகழ்ச்சிகளாவன:-

மாலை 6 மணி – செல்விகள் ரி. வேல்விழி, ரி. வாசுகி, எ. துளசி, எஸ். ஜெயந்திபாடுவார்கள்.

மாலை 6–25 மணி – செல்வி கலாவதி சச்சிதானந்தம் பாட்டு, செல்வன் எஸ். கே. கணேசலிங்கம் மிருதங்கம்.

இரவு 7 – 8 மணி செல்வி ஜனதா சின்னப்பு பாட்டு, செல்வன்கள் பி. கண்ணன் வயலின், பி. கிருபாசுரன் மிருதங்கம்.

இரவு 8 – 9மணி திரு. திலகநாயகம்போல் பாட்டு, திரு. ஆர். இராதாகிருஷ்ணன் வயலின், திரு. எம். சிதம்பரநாதன் மிருதங்கம், செல்வன் பி. கிருபாகரன் கஞ்சிரா.

— ★ —

யாழ் ரசிக ரஞ்சன சபாவின் 31வது ஆண்டு விழாவின் 10வது தினமாகிய இன்று புதன்கிழமை நிகழ்ச்சிகள்:-

மாலை 6 மணி – செல்வி எம். புஷ்பமலர் பாட்டு, செல்வன் பி. கண்ணன் வயலின், செல்வி மீனலோசனி வீரசிங்கம் மிருதங்கம்.

இரவு 7 மணி – திரு. எ. கே. கருணாகரன் பாட்டு, திருமதி ஞானம்பிகை பத்மசிகாமணி வயலின், பி. சின்னராசா மிருதங்கம். (உ)

## வீதி புனரமைக்க கப்புதூ. கி.உ.சபை தீர்மானம்

[புலோலி]

தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து காப்புதூ பொதுமயானம் வரை சீரற்றுக்கிடக்கும் வீதியைத் திருத்திப் புனரமைப்புச் செய்ய வேண்டுமெனக் கப்புதூ கிராமோதய சபை தீர்மானித்துள்ளது.

கப்புதூ இந்துகலவன் பாடசாலை மண்டபத்தில் கிராமோதயசபைத்தலைவர் திரு. கே. செல்லையா தலைமையில் நடைபெற்ற இக்கிராமோதயசபைக் கூட்டத்தில் கப்புதூ வைத்தியசாலையில் மருத்துவசேவைகளை வழங்க நடவடிக்கை எடுப்பதென்றும், காப்புதூ பொதுமயானத்தைச் சிரமதான முறையில் திருத்திப் புனரமைப்பு செய்வதெனவும் தீர்மானிக்கப் பட்டது. (அ)

திரு. அ. அமிர்தலிங்கம் தம்பதிகளும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு. நடராசா, யாழ். அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா, வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை, மற்றும் யாழ். மாவட்ட எம். பி. க்களும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

— ● —

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பணிமனைக்கான அடிக்கல் நாட்டு வைபவம் இன்று முற்பகல் நடைபெறவுள்ளது, எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் அடிக்கல்லை நாட்டிவைப்பார். கூட்டணி உறுப்பினர்கள் உரையாற்றுவர்.

— °° —

யாழ். கூட்டுப் பன்முக பணிமனை முதலாம் மாடியிலமைந்துள்ள யாழ். பல நோ. கூ. சங்க தலைமைப் பணியகத்தை எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் இன்று பிற்பகல் திறந்துவைக்கவுள்ளார். [மா]

## இன்று

யாழ்ப்பாணம்)

சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசத்தின் முதலாவது ஆண்டு விழா யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் காலை தொடக்கம் பொது மகாநாடு மகாசபைக்கூட்டம், கலை அரங்கம் என மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக

ச. தொ. ச.

கூ. மொ. வி. ஸ்தாபனம் C.W.E.

குறைந்த விலையில்

**துவரம் பருப்பு**

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தில் இறக்குமதி செய்யப்பட்ட போஷாக்கு நிறைந்த துவரம் பருப்பு இப்பொழுது விலை குறைக்கப்பட்டு விற்பனைக்குண்டு.

மொத்த விலை - கிலோ ரூபா 16/-

சில்லறை விலை - கிலோ ரூபா 17/-

மொத்தமாக கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் தயவுசெய்து பிராந்திய களஞ்சியப் பொறுப்பதிகாரிகளுடன் தொடர்புகொள்ளவும்.

பிரதிப் பொதுமுகாமையாளர்
(மொத்த விற்பனை)

(யாழ்ப்பாணம் போன்: 497)

(4066)

★ யாழ். பொதுசன நூல்நிலைய மூன்றும் கட்டம்:

# மாநகரசபைக் கூட்டத்தில் காரசாரமான விவாதம்!

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ். பொதுசன நூல்நிலைய மூன்றும் கட்டமான உத்தேச நீடிப்பவேலைகளுக்கு கிடைத்த கேள்விகளை, நிதிக் (சட்டம் – பொது அலுவல்கள்) குழுவும், கேள்விச்சபையும் இணைந்து பரிசீலித்து செய்த சிபார்சை ஏற்றுக்கொள்வது சம்பந்தமாக யாழ். மாநகராட்சி மன்றத்தின் விசேட கூட்டத்தில் நேற்று ஆராயப்பட்டபோது, நிதிக்குழுவின் அறிக்கையும், கேள்விச்சபையின் அறிக்கையும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருப்பதாகப் பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

அத்துடன் குறைந்த கேள்வி ஒப்பந்த காரருக்கு கட்டிட வேலை கொடுக்கச்சிபார்சுசெய்யப்பட்டதையும் கண்டித்துப் பேசினார்கள்.

யாழ். மாநகராட்சிமன்ற முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் இதற்குப் பதிலளித்துப் பேசுகையில், ''இது ஒரு முக்கியமான விஷயம். சபை நிலையிலிருந்து குழுநிலைக்கு மாற்றுகிறேன். நேர காலத்தைப் பாராது பரிசீலனை செய்யுங்கள்'' என்றார்.

திரு. துரைராஜா சாந்திக்குமார் பேசுகையில்; ''நூல்நிலைய நிதிக்கு தமிழ் இனப்பற்றோடுதான் மக்கள் பணத்தை அள்ளித்தந்தார்கள். எதுவிதத்திலும் ஊழல்நிலவிடக்கூடாது.

நிதிக்குழுவினதும், கேள்விச் சபையினதும் அறிக்கைகள் முரண்பாடாக இருக்கிறது. பொறியியலாளரின் நேரடியான நிர்வாகம் இல்லாவிடில் நிச்சயமாக ஊழல் நிலவும்'' என்று தெரிவித்தார்.

முதல்வர் இராஜா விசுவநாதன்: ''கௌரவ உறுப்பினர்களும் வேலைகளைப் பார்வையிட உரிமை உண்டு. குருநகரில் நடக்கும் சந்தைக் கட்டிட வேலைகளைக் கூடச்சென்று பார்வையிடலாம்.''

திரு. சாந்திகுமார்; 'யாழ். [illegible]துசன நூல்நிலயம் தமிழ் [illegible] சொத்து. சொல்ஒன்று, செய்வதொன்றாக இருக்கக்கூடாது. குறைந்த தொகைக்குக்கேட்ட கேள்விக்காரருக்கு கட்டிட [illegible]ப்பட்டுள்ளது. தரம்குறைந்த இரும்புக்கம்பி, நேரில்லாத பலகைகள், குறைந்த சிமெந்துக் கலவைகள் ஆகியனபற்றி சாதாரண ஊழியர்களுக்குத் தெரியாது. இதுவிஷயமாக ஏமாற்றலாம். இதற்கு பொறியியலாளரின் [illegible]பு இருக்க வேண்டும்.''

ஆணையாளர் திரு. கே. வி. சிவ[illegible] பொறியியலாளரால் தனித்துச் செய்யமுடியாது. கூட்டுப் பொறுப்பாக கண்க[illegible]க்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

திரு. சாந்திகுமார்; குறைந்த தொகையோடு செய்யமுடியாதெனத் தெரிந்துகொண்டும் எப்படி இந்த ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டது? மாநகரசபைச் சட்டப்படியா? அல்லது தனிப்பட்டமுறையிலா?

முதல்வர்: திரு. சாந்திகுமார் தமிழ்ப் பற்றோடு இதுணைக்கப்பட்டவிஷயம்என்று குறிப்பிட்டிருக்கிறார். இது உண்மை, இது பற்றி நனகு ஆலோசியுங்கள்

திரு. சாந்திகுமார்;

''குறிப்பிட்ட ஒப்பந்ததாரர் இதுவிஷயத்தில் என்னபற்றோடு இருக்கிறாரோ தெரியாது அவர் எடுத்துக்கொண்ட தொகையின்படி செய்யமுடியாது.''

திரு. எட்வேட்:

''நல்லமுடிவாக வருவதை நாங்கள் வரவேற்கவேண்டும்''.

[illegible]. எஸ் பீரியல்:

30 லட்சம் ரூபாமதிப்பீடாக இருக்கையில் ஏன் குறைந்த கேள்விக்காரருக்கு வழங்க வேண்டும்?''

திரு. சாந்திகுமார்: பொறியியலாளரின் நேரடிக்கண்காணிப்பில்லா விட்டால், இந்த ஒப்பந்தத்தை பூரணமாக எதிர்க்கிறோம். சிமெந்துக் கலவை பகலில் ஐந்துக்கொன்றும், இரவில் ஒன்பதுக்கொன்றும் போடுவார்கள்.

முதல்வர்: ''அனுபவமுள்ள அங்கத்தவர்கேட்கிறார் பொறியியலாளர் பதில் சொல்லுங்கள்''

பொறியியலாளர்: எந்த ஒரு ஒப்பந்தகாரரும் நஷ்டத்துக்கு வேலைகளை எடுக்கமாட்டார்கள் செய்யவும் மாட்டார்கள்.

இதனைத்தொடர்ந்து திரு. எஸ். சண்முகராசா கொண்டு வந்த பிரேரணையை திரு. செல்வநாயகம் வழிமொழிந்தார் இப்பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு கட்டடவேலைகள் ஒப்பந்தகாரருக்கு வழங்கவதென்று தீர்மானிக்கபபட்டது (மா)

## யாழ். நூலக....

(–1ம் பக்கத் தொடர்ச்சி)

நவரத்தினம், யாழ் முதல்வர் திரு. இராஜா விசுவநாதனுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

டாக்டர் எலியேசர், திருமதி எலியேசர், டாக்டர் இந்திரன் செல்வேந்திரா, திரு. சோமசுந்தரம், டாக்டர். சிவேந்திரன் ஆகியோரின் உதவியால் அவரவர்கள் இணைந்துள்ள பல்கலைக் கழகங்களில் இருந்து பல்கலைக்கழகங்கள். மற்றும் நூல்நிலையங்களின் அன்பளிப்புக்களாக, குழந்தைகளுக்குரியனவும், எந்திரவியல், கணிதம் சம்பந்தப்பட்ட புத்தகங்கள் யாழ் நூலகத்துக்காகத் திரட்டப்பட்டிருப்பதாகவும், அவற்றை செப்டம்பர் மாதமளவில் இலங்கைக்கு அனுப்பிவைக்க விருப்பதாகவும் மேற்படி கடிதத்தில் தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளது. (மா)

## பெரியகுளம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மணியம் இன்று அறிவித்துள்ளார். நாளை இவர் வேட்புமனு தாக்கலாகும்.

எம். ஜி. ஆரின் அண்ணா தி. மு. க. வும் இத்தேர்தலில் போட்டியிடப் போவதாகவும், திரு. எஸ். டி. கே. ஜக்கையா தமதுவேட்பாளராகப்போட்டியிடுவாரென்றும் அ. தி. மு.க. செயலாளர் திரு. பா. உ ஷண்முகம் இன்று சென்னையில் அறிவித்தார்.

## மட்டக்களப்பு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

''மாவட்டஅபிவிருத்திசபைகளுக்கு அதிகாரமே கிடையாது'' என்று அமைச்சர் தேவநாயகம் கருத்து வெளியிட்டதைத்தொடர்ந்து, இக்கூற்றை அமைச்சர் தேவநாயகம் வாபஸ் பெறும்வரை அபிவிருத்தி சபைக்கூட்டம் நடக்கமாட்டாது என்றும் இது சம்பந்தமாக அரசு தரப்பில் விளக்கம் அளிக்கப்பட வேண்டும் என்றும் திரு சம்பந்தமூர்த்தி அறிக்கை வெளியிட்டிருந்தார்.

நிலைமை இவ்வாறு இருந்தபோதிலும் கடந்த சனிக்கிழமை, தமிழர் விடுதலைக் கூட்டணிப் பொதுச்சபை திருகோணமலையில் கூடியதைத் தொடர்ந்து, இச்சர்ச்சைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது

அபிவிருத்திசபையின் கூட்டம் அண்மையில் நடக்குமா என்று தலைவர் திரு எஸ். சம்பந்தமூர்த்தியிடம் செய்தியாளர்கள் நேற்று கேட்டபோது; செப்டம்பர் மாதம் பதின்மூன்றும் திகதி கூட்டம் நடைபெறும் என்று பதிலளித்தார்.

## ஒரு இளம் குடும்பம்...

]1-ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு முன்னர் பிறந்தாள்!

இன்று நித்தியாவின் பால் பருக்கும் சுப நிகழ்ச்சியை நடாத்த கணவனும் மனைவியும் முடிவு செய்தார்கள். நெஞ்சமெல்லாம் அவளைப் பற்றித்தான்பெற்றோர்களுக்கு நினைப்பு! நித்தியாவை எப்படியெல்லாம்வளர்க்கவேண்டுமென்று கனவு கண்டவர்கள் பால் பருக்கும் நிகழ்ச்சியையும் ஆலயத்தில் வைக்கவேண்டும் எனத் திட்டம்போட்டார்கள்.

### தகராறு

உற்றார், உறவினர்கள் எல்லாரையும் அழைத்து அருமையான ஒரு சிறு நிகழ்ச்சியாக நடாத்தவேண்டுமென்ற திட்டத்தில் கருத்து முரண்பாடு தன் தாய்தந்தையையும் அழைக்கவேண்டுமென்று விரும்பினாராம் ஜெயலஷ்மி! கணவர் நித்தியானந்தன் விரும்பவில்லையாம்! இதனையடுத்து இருவருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டிருக்கிறது!

நேற்று மத்தியானம் ஏற்பட்ட இந்தத் தகராறைஜெயலக்ஷ்மியால் ஜீரணிக்கமுடியவில்லை.

### உனக்காகவே வாழ்ந்தோம்

கணவன் வெளியே சென்ற நேரம் பார்த்து—

உனக்காகவே வாழ்ந்து உனக்காகவே பெற்றெடுத்த உன் நித்தியாவோடு, உன்நினைவோடு, நீயில்லாத உலகுக்குப் போகிறேன் என்று சொல்லாமல் சொல்லிவிட்டு தன் குழந்தைக்கும் நஞ்சைப்பருக்கி தானும் நஞ்சைக்குடித்துவிட்டார் ஜெயலக்ஷமி!

இது நடந்தது மத்தியானம்! சில நிமிட நேரத்தில் அங்கு வந்த நித்தியானந்தன் துடிதுடித்துக்கொண்டிருந்த ஆருயிர் மனைவியையும், ஆசைச் செல்வத்தையும் பார்த்துப் புரிந்து கொண்டு—

'நீங்கள்போனஉலகத்துக்கே நானும் வருகிறேன்' என்று சொல்லிக்கொண்டே அங்கிருந்த நஞ்சைத்தானும் அருந்தினார்;

மூன்று உயிர்களும் 'அரை குறையாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக்கொண்டுவரப் பட்டன!

### மீளாத்துயில்

ஓரிருநிமிட வித்தியாசத்தில் மூன்று உயிர்களும் பிரிந்தன

தமது வீட்டில் சிரித்துப் பேசிக் கொஞ்சி விளையாடி மகிழ்ந்த நித்தியும். ஜெயாவும், நித்தியாவும் யாழ் ஆஸ்பத்திரி சவ அறையில் மீளாத் துயிலில் இருப்பது கண்ணீரை பெருகவைக்கிறது!

யாழ் மரணவிசாரணை அதிகாரி திரு கனகரத்தினம் கேசவன் நேற்று இரவு நடத்திய இவர்களது மரண விசாரணையில் மேற்கண்ட விபரங்கள் தெரியவந்தன. ஆஸ்பத்திரி பொலிஸ்பிரிவைச்சேர்ந்த கே. தாமோதரம்பிள்ளை சாட்சிகளை ஆஜர் செய்தார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி, 62-ம் இலக்க அச்சகத்தில் 1982 [illegible] செப்டெம்பர் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu — P. O. Box 49 Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.